3328.

# குமரி மலர்

பதிப்பாசிரியர்

ஏ.கே.செட்டியார்

50 காசு



# Why is it worth waiting for a Standard Ten ?

- PERFORMANCE - It is specially designed for safety, easy manoeuvrability and quick acceleration.
- RELIABILITY - It is sturdy in construction and reliable.
- ECONOMY - It gives 35 miles per gallon on an average, or more, depending on driving conditions.
- STYLE - Its beautiful body lines, and distinctive dual tone colouring make it stand-out anywhere.
- COMFORT - It seats four/five persons comfortably, with ample luggage space as well.

DE LUXE MODEL




STANDARD

# STANDARD TEN

**THE UNION CO (MOTORS) PRIVATE LTD.**

**MADRAS — BANGALORE — OOTY**

38728



# தேவைகள் கோடி

# அவற்றுக்கேற்ற 'பாடி'



1930 ஆம் ஆண்டிலிருந்து, 'சேஸிஸ் பாடி' பஸ், லாரி,'வான்')கட்டுவது சம்பந்தமான தனிப்பட்டவர்களின் தேவைகளை டிவிஎஸ் ஆராய்ந்து வந்திருக்கிறது. அனுபவத்தா லும், சொந்த உபயோகத்தாலும், 'பாடிகள்' அமைப்பதற்கு வேண்டிய நல்ல சாமான் களைத் தேர்ந்தெடுத்து, தேவைகளுக்கு ஏற் படி, தக்க முறையில் தயாரிக்கிறது.

முழு அலுமினியத்தகடு எக்ஸ்பிரஸ் 'வான்', முழு அலுமினியப் பஸ், பெரும்பாலும் அலு மினியத்தகடு மூடிய லாரிகள் 'பிக்கப் வான்', கமர்சியல் வான்.' 'ஆம்புலன்ஸ்' வண்டி, ஸ்கூல் பஸ், 'கோச்சு' மற்றும் 'கம்போசிட் டெப் பாடி'களை டிவிஎஸ் கட்டுகிறது.




**டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்**

**பிரைவேட் லிமிடெட், மதுரை**

கிளைகள்: திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்

IWT-TVS-BB-10503

# உணவுச் சிறப்பு

காமதேனு வனஸ்பதியினுல்
இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள். இனிப்பு பண்டங்கள் **காமதேனு** வனஸ்பதியில் தயார் செய்தால் நல்ல ருசியாய் இருக்கும். நெய் போன்றது ; விலை குறைவானது.

கண் பார்வைக்குத் தேவை யானதும். சரும உபாதைகளைப் போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப் பெற்றது.

தயாரிப்பு :

**மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டிரியல்**
**கார்ப்பொரேஷன் லிட்.,**

**மேட்டூர் அணை, சேலம் ஜில்லா.**

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :

சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.

FOR YOUR REQUIREMENTS
OF QUALITY

# KALINGA

## WATER PIPES

Galvanized & Black

**Contact DISTRIBUTORS**

*for Madras, Visalandhra, Karnataka (Mysore), Kerala and Pondicherry States:*

## South India Corporation (Agencies) Private Ltd.,

**6, Armenian Street— —Post Box No. 113**

**MADRAS-1.**

Phone: 4911 (4 Lines) Grams: "GOODWILL"

*Branches :* **COIMBATORE, MADURAI, VIJAYAWADA, BANGALORE, SECUNDERABAD, and CALCUTTA.**




# கோ-ஆப்டெக்ஸ்


## கைத்தறி ஆடைகள்

ஆடைக்கும் இதர பல அலங்காரங்கட்கும்

**சென்னை இராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்**
**"பாலசுந்தரம்" கட்டிடம் எழும்பூர், சென்னை-8.**


சுவர்ண மாளிகை
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
P-1-49
கோயமுத்தூர்

## ANNOUNCEMENT.



# "TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE**
**THAT THEIR 4 CYLINDER**
**36 To 86 H. P.**
**AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-

**Textool Company Limited,**
**Post Box No. 221,**
COIMBATORE.

**Phone:** 409 1409

**Gram:** 'TEXTOLCO'




VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

**Branch :**

**L. I. C. BUILDING**
**Mount Road, : MADRAS-2**

# பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

(ஷெடியூல்டு பாங்க்)

தலைமை காரியாலயம்
82-83, கீழ ஆவணி மூல வீதி
மதுரை

சென்னைக் கிளை
10. பிராட்வே
சென்னை-1.

மற்றும் சென்னை ராஜ்யத்தில் 22 கிளைகளும் கேரள ராஜ்யத்தில் திருவனந்தபுரம், கொச்சின் ஆலப்புழை, கோழிக்கோடு ஆகிய இடங்களில் கிளைகளும், எல்லா முக்கிய வியாபார ஸ்தலங்களில் ஏஜென்ஸிகளும் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... | ரூ. 14.00 | லக்ஷம் |
| இருப்பு நிதி | ... | ரூ. 8.00 | ,, |
| டெபாசிட்டுகள் | ... | ரூ. 3.25 | கோடி |
| தொழிலில் உள்ள தனம் | ... | ரூ. 3.50 | ,, |

—●—

திரு. கருமுத்து தியாகராசன்,
தலைவர்

## வட்டி விகிதங்கள்

சேவிங் டெபாசிட் -3% (தினசரி இருப்பின்பேரில்)
கரண்ட் டெபாசிட்-½% ,,

பிக்ஸட் டெபாசிட்- 3, 6, 12, 24 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும் - வட்டி விகிதங்கள் விண்ணப்பத்தின் பேரில்

—●—

ரெகரிங் டெபாசிட் ரூ 5/-ம் அதன் பெருக்கங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படும்-சுமார் 5% கூட்டு வட்டி கிடைக்கும்.

காரைக்குடி கிளையில் "பாதுகாப்புப் பெட்டி" வசதிகள் கிடைக்கும்.

G. சுவாமிநாதன், M.A., B.L.,
செக்ரட்டரி

மலர் 17 இதழ் 7

சார்வரி—ஐப்பசி

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தலைசிறந்த சட்டம் —காந்தியடிகள் | 6 |
| 2. | நான் கண்ட விநோபாஜி —எல்ஸ்வர்த் பங்கர் | 10 |
| 3. | காந்தியடிகள் —ஜவாஹர்லால் நேரு | 17 |
| 4. | கொய்த மலர்கள் | 22 |
| 5. | புல்லிலிருந்து ரொட்டி | 37 |
| 6. | பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலை | 40 |
| 7. | லியோ டால்ஸ்டாய் | 43 |
| 8. | ஜெர்மனியின் உதாரணம் —சசிகலா திரிவேதி | 49 |
| 9. | மணிதன் முதலில் எங்கு தோன்றினன் | 53 |
| 10. | விசித்திரக் கண் காட்சி | 57 |
| 11. | பென்சில் தோன்றிய கதை | 60 |
| 12. | விட்லி கௌன்சில்கள் | 63 |
| 13. | ஆழ்கடலுக்கு அடியில் | 67 |
| 14. | அமெரிக்கத் தேர்தல் | 71 |
| 15. | சுதந்திர நைஜீரியா | 87 |
| 16. | ஈ | 90 |
| 17. | குப்பை மலை | 94 |

# தலைசிறந்த சட்டம்

**காந்தியடிகள்.**

சில காரியங்களை நாம் நல்லவை என்கிறோம்; மற்றும் சில காரியங்களைக் கெட்டவை என்கிறோம்; இயற்கையாகவே நமக்கு மகிழ்ச்சி தரும் காரியங்கள் உண்டு; அவ்வாறே நமக்கு வெறுப்புத் தரும் காரியங்கள் உண்டு. ஆனால், இவ்வாறு ஒரு காரியத்தை நல்லதென்றோ, கெட்டதென்றோ தீர்மானிக்கும் போது, அது நன்மை பயக்கக் கூடியதா, அல்லது தீமை பயக்கக் கூடியதா, என்று ஆராய்ந்து நாம் முடிவு கட்டுவதில்லை. பரம்பரையாக வந்த அபிப்பிராயங்கள் பல, நம் உள்ளத்தில் ஏற்கெனவே இருந்து வருகின்றன. இந்த அபிப்பிராயங்களை ஆதாரமாகக் கொண்டே, நாம் மற்றவர்களுடைய காரியங்களை நல்லவை, கெட்டவை என்று நிர்ணயிக்கிறோம்.

ஒரு மனிதன் மற்றொருவனுக்குத் தீங்கு செய்வதாக வைத்துக் கொள்வோம். அதனால் நமக்கு யாதொரு தீமையும் விளையவில்லை என்றாலும், நாம் அதைத் தீய செயல் என்றே கருதுகிறோம். சில சமயம் தீங்கு இழைப்பவனிடம் நாம் அனுதாப முள்ளவர்களாக இருத்தலும் கூடும். எனினும் சிறிதும் தயங்காமல் அவனுடைய தீச்செயலைக் கண்டிக்கிறோம். சில சமயம் நமது அபிப்பிராயங்கள் தவறாகி விடுகின்றன. மனிதர்கள் என்ன நோக்கங்கள் கொண்டு காரியங்கள் செய்கிறார்கள் என்பதை நாம் எப்போதும் அறிய முடியாதிருப்பதால், இத்தகைய

தப்பு அபிப்பிராயங்களுக்கு இடமேற்படுகிறது. இருப்பினும், செய்தவனின் நோக்கம் தெரியவில்லை என்பதற்காக நாம் காரியங்களைப் பரிசீலனை செய்யாமல் இருப்பதில்லை. தீய செயலால் நமக்கே லாபம் கிடைப்பதால் இருந்தால் கூட, மனத்திற்குள் அது கெட்ட காரியம் என்பதை நாம் உணர்ந்தே யிருக்கிறோம்.

இதிலிருந்து விளங்குவது என்ன? ஒரு காரியம் நல்லா கெட்டதா என்பது மனிதனுடைய சுயநலத்தையோ, விருப்பு வெறுப்புக்களையோ பொறுத்ததன்று. ஒழுக்கமும், நமது சொந்த விருப்பமும் பல சமயங்களில் மாறுபட்டு நிற்கின்றன. குழந்தையிடம் நமக்குள்ள அன்பின் காரணமாக, அதற்கு ஓர் அற்பப் பொருளைக் கொடுக்க நாம் விரும்பலாம். ஆனால், அப்பொருளைக் கொடுப்பதால் குழந்தைக்குத் தீமை விளைவதாய் இருந்தால், அதைக் கொடுத்தல் ஒழுக்கத்துக்கு விரோதமென்றே கருதுகிறோம்.

அன்பு செலுத்துதல் நல்ல காரியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அன்பு செலுத்தும் முறை, ஒழுக்க வரம்புக்கு உட்பட்டிராவிட்டால், அன்பே விஷமாகிவிடும்.

ஒழுக்க நியமத்தில் மற்றொரு விசேஷம் உண்டு. அது என்றும் மாறுபடாத தன்மையுடையது. அபிப்பிராயங்கள் மாறுபடலாம்; ஆனால் நீதிநெறி எப்போதும் ஒரு படித்தாகவே இருக்கிறது.

ஓர் உதாரணம் கூறுகிறேன். நம் கண்கள் திறந்திருக்கும் போது நாம் சூரியனைக் காண்கிறோம். ஆனால் கண்ணை மூடிக் கொண்டால், சூரியன் காணப்படுவதில்லை. இதில் நம் கண்களின் நிலைமாறுதல் அடைகிறதே யன்றிச் சூரியன் ஒரு நிலையாகவே இருக்கிறான் அன்றோ?

ஒழுக்க விதிகளின் விஷயமும் இப்படித்தான். நமது அறிவுக் கண் அஞ்ஞானத்தால் மூடப்பெற்றிருக்கும் போது, நாம் நீதி தர்மத்தை அறிய முடிவதில்லை. அறிவுக் கண் திறந்துள்ள போது அதை எளிதில் அறிந்து கொள்கிறோம்.

மக்கள் தங்கள் அறிவுக் கண்ணைத் துல்லியமாக வைத்திருப்பது மிகவும் கடினம். அவர்கள் சாதாரணமாக சுயநல நோக்குடன் விஷயங்களைக் கவனிப்பதால், அநீதியையும் நீதி என்று சொல்லி விடுகிறார்கள். ஆனால் மக்கள் சுயநல நோக்கத்தை அடியோடு மறந்து ஒழுக்கத்தையே லட்சியமாகக் கொள்ளும் காலம் விரைவில் வரக்கூடும்.

ஒழுக்கம் என்பது இன்னமும் பாலியப் பருவத்திலேயே இருந்து வருகிறது. இது காறும் மனிதர்கள் பூதபௌதிகங்களின் உண்மையை மீறுவதிலேயே அதிக உற்சாகம் காட்டி வந்திருக்கிறார்கள். ஒழுக்க விதிகளை ஆராய்வதற்குப் பதிலாக, அவர்கள் இயற்கை விதிகளை ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டு வந்தார்கள். அவ்வளவு தீரத்துடனும், தன்னல மறுப்புடனும் ஒழுக்க நியமங்களைப் பரிசீலனை செய்வதில் ஈடுபட்டுத் தம் வாழ்நாளை அதிலேயே செலவிட்ட பண்டிதர் ஒருவரை நாம் இது வரை கண்டதில்லை.

பிரகிருதி சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அறிஞர்களைப்போல், நீதி சாஸ்திரப் பரிசீலனையில் ஈடுபடவும் மனிதர்கள் முன்வந்தால்தான் ஒழுக்க விதிகள் சீர்பெற்று அமையும். மற்ற சாஸ்திரங்களின் ஆராய்ச்சியில் மாறுபட்ட கருத்துக்கள் அதிகம் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் ஒழுக்க முறையில் இவ்வளவு கருத்து வேற்றுமை உண்டாவதற்கு இடமில்லை. கொஞ்ச

நாள் வரை, இவ்விஷயத்திலும் சிறிது கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால் சத்தியத்துக்கும், சத்தியமின்மைக்கும் உள்ள பேதத்தை அறிதல் இயலாத காரியமன்று.

இதிலிருந்து, ஒழுக்க விதிகள் மனிதர்களுடைய அபிப்பிராயங்களையும்; விருப்பு வெறுப்புக்களையும் கடந்து நிற்பவை என்று நாம் நன்கறிகிறோம். இவ் விதிகளை நியமம் அல்லது சட்டம் என்று சொல்லலாம். அரசியல் துறையில் சட்ட திட்டங்கள் உள்ளதுபோல, ஒழுக்கத் துறையிலும் ஏன் சட்ட திட்டங்கள் இருத்தல் கூடாது?

ஒழுக்கச் சட்டம் மனிதனால் இயற்றப் பெறவில்லை என்பது உண்மையே. அதுவே அதனுடைய பெருமையாகும்.

ஒழுக்க விதிகள் உண்டு என்பதை நாம் ஒப்புக்கொண்டோமானால், அரசியல் சட்டங்களுக்கு நாம் உட்பட்டு நடப்பது போலவே, அவற்றுக்கும் உட்பட்டு நடத்தல் வேண்டும். உண்மையில், ஒழுக்கச் சட்டம் அரசாங்கச் சட்டங்களையும், வியாபார விதிகளையும் விட உயர்ந்தது.

"வியாபார விதிகளை மீறி நடந்தால், நான் ஏழையாய்த்தானே போவேன்? போனால் போகிறேன்" என்று ஒருவன் சொல்லலாம்.

இவ்வாறே, அரசாங்க அதிகாரிகளின் கோபத்துக்குத் துணிந்து, அரசாங்கச் சட்டங்களையும் ஒருவன் அலட்சியம் செய்யலாம்.

ஆனால், ஒழுக்க விதிகளை எவனும் அசட்டை செய்ய முடியாது.

"நான் பொய் சொன்னால் என்ன? மெய் சொன்னால் என்ன?" என்று கூறி எவனும் தப்பித்துக் கொள்ள முடியாது,

# நான் கண்ட விநோபாஜி

**எல்ஸ்வர்த் பங்கர்**
(இந்தியாவிலுள்ள அமெரிக்க அரசாங்கத் தூதர்)

நான் வெளிநாட்டைச் சேர்ந்தவன். இந்தியப் பெரியார் ஒருவரைப் பற்றி நான் பேசுவது வியப்பாகத் தோன்றலாம். அப்பெரியாரின் உடல் சிறியது. உள்ளமோ பெரியது. அவை பண்டைய இந்தியப் பண்பாட்டின் சாரமாக விளங்குகின்றன. எனினும், விநோபா பாவேயின் உள்ளம் இந்தியாவை மட்டுமன்று, உலக முழுவதையும் தழுவுவதாகும். எனவே, நான் பேசுவது பொருந்தாது என்று நினைக்கவில்லை. எனக்கும் அவருக்கும் ஓர் உறவு இருப்பதாகவும் கண்டேன். அவர் என் கையைப் பிடித்துக் கொண்டு என்னோடு நடந்தார். நாங்கள் ஒரு கிராமத்தின் தெரு வழியே அவரது பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்றோம். அப்பொழுது எனக்கும் அவருக்கும் ஒரே வயது என்று அறிந்தோம். ஒன்றிற்கொன்று முற்றும் மாறுபட்ட சூழ்நிலையில் நாங்கள் வளர்ந்தவர்களாயினும் பூதான இயக்கமும், சர்வோதய இயக்கமும் இந்தியக் கிராமங்களில் வளர்ச்சி பெற்றுவரினும், நான் அவரோடு பேசிக்கொண்டிருந்தபோது, அவரது தத்துவம் உலகமெங்குமுள்ள மக்கள் அனைவருக்கும் நன்மை விளைவிப்பதாகும் என்று உணர்ந்தேன்.

விநோபாவின் செயலும் செய்தியும் உலகத்துக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. "சொல்லுவது போல் செய்வது புரட்சியானால், உழுவாரோடு உள்ளமன

ஒற்றுமையைக் காட்ட நாட்டுப்புறத்தில் நடந்து களைத்துப்போயிருக்கும்போது ஒவ்வொரு நாள் இரவிலும் மண் வெட்டி பிடித்து வேலை செய்யும் விநோபா ஒரு புரட்சியாளர் ஆவார்" என்று என் நண்பர் அமெரிக்க வரலாற்றாசிரியர் வீரா மிச்சல்ஸ் டீன் அவரைப் பற்றிக் கூறியுள்ளார்.

1958 ஆம் ஆண்டில் விநோபாவுக்கு சமுதாயத் தலைவருக்குரிய மாக்ஸேஸே பரிசு வழங்கப்பெற்றபோது பிலிப்பைன் நாட்டிலுள்ள "மணிலா டெய்லி புல்லட்டின்" பின் வருமாறு அவரைப் புகழ்ந்து எழுதியது. "மனிதனின் வாழ்க்கை நோக்கம் பற்றிய புதிய கருத்து ஒன்றை அவர் தமது வாழ்க்கையின் மூலம் உருவாக்கியுள்ளார். அவரது குறிக்கோள்கள் உலகமெங்கும் பரவினால், மக்கள் அனைவருக்குமிடையே ஒரு புதிய சகோதரத்துவம் தோன்றும் நிலை ஏற்படும்..."

அதே சமயத்தில் அமெரிக்காவில் டெக்சாஸ் மாநிலப் பத்திரிகை ஒன்று தன் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டது: "ஆச்சார்யா விநோபா தமக்கென்று ஒன்றையும் நாடவில்லை. ஆயினும், தன்னலமற்ற பணி செய்வோரின் உள்ளம் பெறும் சிறந்த பரிசை அவர் பெற்றுள்ளார்."

சில வகைகளில் விநோபா அமெரிக்காவின் எல்லைப் புறத்தில் வாழ்ந்த ஆப்பிள் ஜானி என்பவரை எனக்கு நினைவூட்டுகிறார். இன்று ஆப்பிள் ஜானியின் உண்மை வரலாறு பழங் கதையாகிவிட்டது. இவர்கள் இருவருக்கும் உள்ள ஒற்றுமை இருவரது ஆன்மார்த்த இயல்களும், இருவரும் மக்களிடம் கொண்டுள்ள அன்புமே. ஆப்பிள் ஜானி ஒரு விந்தையான மனிதர்; நாம் விரும்பும் பெரியார். நான் பிறந்த நியூ இங்கிலாந்தில் அவர் பிறந்திருக்கலாம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் ஓஹையோ இண்டியானு மாநிலங்களின் காடுகளில் அவர் அலைந்து திரிந்தார்.

சிறிய உருவமும், சோர்வுற்ற முகமும், பறட்டைத் தலையும், ஒளிவீசும் நீல நிற விழிகளும் உள்ளவர் அவர். வேனிற் காலத்திலும் குளிர் காலத்திலும் வெறுங் காலால் அவர் நடந்தார். திண்ணமான துணி அல்லது தோலினுல் செய்த முரட்டு உடைகள் அணிவது அவருக்கு வழக்கம். உலக உடமைகளையெல்லாம் துறந்தவர் அவர். கைப்பிடியுள்ள சமையற் கலம் ஒன்றும், தோள் மீது தொங்கும் பை ஒன்றுமே அவரது உடமைகள்.

காடுகளில் நெடுந் தொலை அலைந்து திரிந்தபின் அவர் அமெரிக்காவில் குடியேறியுள்ளவர்களின் வீடு ஒன்றிற்கு வந்து சேர்வார். அந்த வீட்டில் அன்று இரவு உணவு கொள்வார். அதன்பின் அங்கு உள்ளவர்களோடும் பக்கத்து வீடுகளில் உள்ளவர்களோடும், மக்களிடமும் கடவுளின் தன்மையிலும் அன்பு கொள்ள வேண்டுவது பற்றிப் பேசுவார். அவரது சமயக் கொள்கை மிகவும் எளிதானது. அளவிறந்த அன்பே கடவுளது இயல்பு என்பதும், எல்லையற்ற அறிவின் வடிவாகவே இறைவன் விளங்குகிறுன் என்பதுவும் அவரது சித்தாந்தம்.

அவர் சமயக் கோட்பாடுகளைப் பற்றி விரிவுரைகள் செய்வதில்லை. பறவைகளையும் விலங்கினங்களையும் பற்றி அவர் நல்ல கதைகள் சொல்லுவார். பிள்ளைகளும் பெற்றேரும் மிகவும் விருப்பத்துடன் அவற்றைக் கேட்பார்கள். புதிதாய்க் குடியேறியவர்களை விரும்பாத அமெரிக்க இந்தியரும் ஆப்பிள் ஜானியை மிகவும் மதித்துப் போற்றினர். ஜானி, காட்டு மரங்களோடும் வன விலங்குகளோடும்

பேசுபவர் என்றும், சகோதரத்துவத்தையும் நல்லெண்ணத்தையும் பற்றி அறிவூட்டுபவர் என்றும் அவர்கள் கருதினர்கள்.

ஆப்பிள் ஜானி தாம் சென்ற இடமெல்லாம் காடுகள் வெட்டியிருந்த இடங்களில் ஆப்பிள் விதைகளைப் போட்டுக்கொண்டே போனர். பாதைகளில் ஆப்பிள் விதைகள் போடுவதும் அவரது வழக்கம். விதைகளை மக்களுக்கு அவர் கொடுத்துக் கொண்டும் போவார். தமது கோலின் ஒரு நுனியில் தொங்கும் துணிப் பையில் அவர் விதைகள் வைத்திருப்பார்.

ஒஹையோ மாநிலத்தில் மேய்ச்சல் காடுகளிலும், காடுகளின் ஓரங்களிலும் உள்ள ஆப்பிள் மரங்கள் ஆப்பிள் ஜானி போட்ட விதைகளினின்றும் முளைத்தவையே. அவற்றின் பூக்களது நறுமணம் இன்னும் நமக்கு அன்று அலைந்து திரிந்த அப்பெரியாரின் அன்பையும் அறிவையும் நினைப்பூட்டும்.

எளிய வாழ்க்கை, அன்பு ஆகியவையே ஆப்பிள் ஜானியின் தத்துவம்; அவற்றின் சின்னமாக விளங்கியவையே அந்த ஆப்பிள் மரங்கள். அவ்வாறே விநோபாஜி இந்தியாவிலுள்ள நிலத்தைப்பகிர்ந்தளிக்கச் செய்துள்ள பணிகள் காந்தீயத் தத்துவத்தை அவர் கடைப்பிடிப்பதால் விளைந்துள்ள பலன்களாகும். வறுமையால் வாடுவோருக்கு நிலம் உள்ளவர்கள் நிலம் வழங்கவேண்டும் என்று அவர் கூறுகிறார். அவரது கண்களோ ஜடப் பொருள் உலகுக்கு மேற்பட்ட அன்பு, அஹிம்சை மயமான ஓர் உலகத்தை நோக்குகின்றன. எளிய வாழ்க்கை அவ்வுலகில் சிறந்து விளங்குகிறது; மக்கள் ஒருவருக்கொருவர் சகோதரராக இருப்பதால், சமாதானமாக வாழ்கிறார்கள்.

மேற்கண்ட கருத்துக்கள் நடைமுறைக்கு ஏற்றவை அல்ல, இக்கொள்கை உள்ளவர்கள் கனவுலகில் வாழ்பவர்கள் என்று சிலர் கூறுவர். என் மனைவியும் நானும் ஆச்சார்யா விநோபாவுடன் பேசிக் கொண்டிருந்தபோது, அவர் நடை முறைக்குப் பொருந்தாத வெறுங் கனவு காணும் துறவியல்ல என்பதைக் கண்டோம். ஆனால் சென்ற ஏப்ரல் மாதத்தில் கூட்டுறவுப் பண்ணைப் பிரச்னைகள் பற்றி அவரோடு பேசியபோது, கூட்டுறவுச் சங்கத்தில் கிராம வாசிகள் முனைந்து ஈடுபடுவது அவசியம் என்று அவர் சொன்னார்; கல்வி மிக மிக முக்கியம் என்று அவர் தெரிவித்தார்.

கிராமத் தொழிலையும் விவசாயத்தையும் விருத்தி செய்யவேண்டும் என்றும், கிராம வாசிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வாய்ப்புக்களைப் பெருக்கவேண்டும் என்றும் அவர் உணர்வதை அறிந்தேன். முற்போக்கான விவசாய முறைகளை மற்றவர்களுக்குக் காட்டக்கூடிய தொழிலாளர் வேண்டும் என்றும் அவர் கருதினார். எந்தச் சோதனை நடத்தினாலும் அதன் பயனைக் கிராம வாசிகள் கண்டுகொண்டால் அவர்கள் அதனைக் கடைப்பிடிப்பார்கள் என்று விநோபாஜி என்னிடம் சொன்னார். அமெரிக்க விவசாய முறைகளைப் பற்றியும், அவற்றை இந்தியாவின் நிலைமைக்குத் தகுந்தவாறு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றியும் அவர் அறிய விரும்பினார். இந்தியாவில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஜப்பானிய விவசாய முறையை எவ்வாறு பிற்பற்றலாம் என்றும் அவர் அறிய விரும்பினார்.

உலக விவகாரங்களின் போக்கை அவர் நன்கு உணர்கிறார். விஞ்ஞானம் வளர்ச்சியடைவதால் உலகம் ஒன்றுபடலாம் அல்லது முழுவதும் அழிந்தொழியலாம் என்று கூறினார்.

ஒரு சமயத்தில் பெரு நிலக் கிழார்கள் கூட்டத்தில் பேசியபோது, "அமெரிக்கரை இவ்விஷயத்திலாவது பின் பற்றுங்கள். அவர்கள் எல்லாரையும் விடச் செல்வர்கள். உலக முழுவதற்கும் அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுப்பதால் செல்வர்களாக இருக்கிறார்கள். அவர்கள் செல்வர்களாக இருப்பதால் கொடுப்பதில்லை... ஏனென்றால் செல்வம் காற்றைப் போன்றது. அது வீசுவதைத் தடுத்தால் காற்றே இருக்காது" என்றார். இவ்வாறு கூறிய வரது சமாதான சகோதரத்துவ இலட்சியம் ஆன்மார்த்த மானது; எனினும் அவர் உலகியல் முறைகளை அறிந்த வராக விளங்குகிறார்.

இப்பெரியாரின் ஆற்றலுக்கு ஊற்றாய், உடலின் திண்மைக்குக் காரணமாய், மக்களின் பிரச்னைகளை அறியும் திறமைக்கும் அவரது நுண்ணறிவுக்கும்உறைவிடமாய் இருப்பது பிரார்த்தனையால் அவர் இறைவனோடு ஒன்று பட்டு வாழ்வதேயாகும். ஒரு சமயத்தில் அவர் ஒரு பிரஞ்சு மத குருவிடம் பின்வருமாறு கூறினார்:

"சில சமயங்களில் நான் கிறிஸ்தவக் கோயிலுக்குப் போயிருக்கிறேன். அங்கு மௌனமும் அமைதியும் நிலவக் கண்டிருக்கிறேன்.

"மசூதிகளுக்கும் போயிருக்கிறேன். அங்கு மக்கள் கடவுளுக்காக பக்தியாய்க் காத்திருப்பதையும், கடவுளுக்குபயந்து வணங்குவதையும் பார்த்திருக்கிறேன்.

"ஹிந்துக் கோயில்களுக்கு நான் சென்றிருக்கிறேன். அங்கு கடவுள் அவர்கள் நடுவில் இருப்பதாக எண்ணி, அவர்கள் கைதட்டி, மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்வதைக் கண்டிருக்கிறேன்.

"சடங்கும், ஆயுத்தமும், சில சமயங்களில் சொற்களும் இன்றி, அமைதி நிலவும் இரவிலும், வேலை செய்யும் போதும், நூல் நூற்கும் போதும் நான் தனியே பிரார்த்தனை செய்கையில் இந்த மூன்று நிலைகளையும் நான் அடைந்திருக்கிறேன். ஆற்றலையும் அமைதியையும், அடக்க முடியாத மகிழ்ச்சி ஆரவாரத்தையும் நான் அனுபவித்திருக்கிறேன்".

மக்கள் அனைவரின் மனத்திலும் அழுந்திக் கிடக்கும் உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் விநோபாஜி இம் மொழிகளால் தெரிவித்துள்ளார் என்று கருதுகிறேன்; எனவே அவர் எல்லா மக்களுக்கும் உறவினராவார்.

# காந்தியடிகள்

## ஜவஹர்லால் நேரு

காந்தியடிகள் இந்திய அரசியல் வானில் தோன்றிய பின்னர்தான் இந்திய தேசீய இயக்கம் பரவ ஆரம்பித்தது. அதற்கு முன் தலைவர்கள் எவ்வளவோ பேர் இருந்தார்கள். ஆனால் காந்தியடிகள் வந்த பின்னர்தான் பலன்களைக் காண ஆரம்பித்தோம். அவர் மகத்தான ஒரு தலைவர், போர் வீரர், சேனாதிபதி. சாத்விகமான இந்திய படைக்குத் தலைமை தாங்கி நடத்திய சாத்வீகத் தளபதி. செய்கையில் மட்டும் சாத்வீகமல்ல; மனத்தாலும் கூட பலாத்காரத்தை நினைக்காத சாத்வீகப் போர் வீரர் காந்தியடிகள். யாரைப் பற்றியும் மனத்தில்கூட அவர் தீங்கு நினைத்ததில்லை. போர் வீரர் என்றால் சாதாரணமானவர் அல்ல. கண்டிப்பான ஒழுங்கு, கட்டுப்பாடுகளைச் செயலில் நடத்தியவர்.

சென்ற நாற்பது ஆண்டுகளில் நடந்தவைகளை நினைத்துப் பாருங்கள். எத்தனை தடவை அவர் தமது சட்ட மறுப்பு இயக்கங்களைத் திடீர் என்று நிறுத்தியிருக்கிறார். ஏன்? யாரோ கட்டுப்பாடில்லாமல் நடந்து கொண்டு விட்டார்கள் என்பதற்காகத்தான். பெரிய லட்சியங்களுக்காகவே அவர் போராடினார். நாட்டிலுள்ள முப்பத்தாறு கோடி மக்களும் விடுதலைபெற வேண்டுமென்று அவர் விரும்பினார். வெறும் விடுதலை மட்டுமல்ல; இந்திய மக்கள் தைரியம், கட்டுப்பாடு ஆகியவைகளில் தேர்ச்சி பெற்றுத் தலை நிமிர்ந்து நடக்க வேண்டுமென்று அவர் விரும்பினார்.

நாட்டிலுள்ள ஏழை மக்களுடன் அவர் தம்மை ஐக்கியப் படுத்திக் கொண்டார். ஏழையுடன் ஏழையாக வாழ்ந்தார். அவர் அணிந்த ஆடையும், நடத்திய வாழ்க்கையும் ஏழ்மையையே சுட்டிக் காட்டின. ஏழையின் வறுமை நீங்கவேண்டும். அத்துடன் அவன் முதுகெலும்பு உள்ள மனிதனுக மாற வேண்டும் என்பதே அவருடைய கனவு.

ஆரம்ப காலத்தில் நான் எப்படி யிருந்தேன் என்பதையும் கூற விரும்புகிறேன். காந்தியடிகளின் செய்தி 1920 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்திலுள்ள எங்களுக்கு எட்டியது. ஆயிரக்கணக்கானவர்கள் அவருடைய செல்வாக்கின் கீழ் வாழ்ந்தார்கள். அப்படி அதில் ஈடுபட்டவர்களில் நானும் ஒருவன். அப்பொழுது எங்களுக்கு இருந்த ஆர்வத்தில் எல்லாவற்றையும் மறந்து விட்டோம். அன்ருட வேலைகளை மறந்தோம்; குடும்பங்களைக்கூட மறந்துவிட்டோம். காந்தியடிகளின் இயக்கம் எங்களுக்கு ஒரு விதமான போதையை அளித்தது. கிராமங்களுக்குச் சென்று இச் செய்தியைப் பரப்பினேம். நாங்கள் இங்கிலாந்தில் கல்வி பயின்று, அந்தச் சூழ்நிலையில் வந்தவர்கள். ஆனுல் அப்பொழுது காந்தியடிகளின் செய்தியுடன் கிராமங்களுக்குச் சென்ற பொழுது ஏழைகளைக் கண்டோம். இந்த ஏழைகளை யாராவது திரும்பிப் பார்த்தார்களா? அவர்களைத் திரணமாக மதித்து நடத்திக் கொண்டிருந்தார்கள். குழிவடைந்த கண்களுடன், எல்லா நம்பிக்கைகளையும் இழந்து சோர்வுற்றிருந்த ஏழைகளைக் கண்டோம்.

"பயப்படாதிர்கள். எதைக் கண்டு பயப்படுகிறீர்கள்? நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடனும் கட்டுப்பாடுடனும் வேலை செய்தால் எதற்குப் பயப்படவேண்டும்? என்ன நேர்ந்துவிடப் போகிறது? சிறையில்

தள்ளுவார்கள்; சுடுவார்கள். அவ்வளவுதானே?" என்ற காந்தியடிகளின் செய்தியைக் கிராமம் கிராமமாகப் பரப்பினோம். இது மின்னல் வேகத்தில் பரவியது. நம்பிக்கை இழந்திருந்த மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது.

முதல் சத்தியாக்கிரக இயக்கம் எனக்கு இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. ஆகா! அன்றுதான் என்ன உற்சாகம்! என்ன ஆனந்தம்! 1921 ஆம் ஆண்டில் ஆயிரக்கணக்கானவர் சிறை சென்றனர்.

திடீரென்று இயக்கத்தை நிறுத்திவிட்டதாக காந்தியடிகள் தெரிவித்தார். ஏன்? சௌரிசௌராவில் யாரோ சிலர் போலீஸ்காரர்களைத் தாக்கினார்களாம் அதனால் நிறுத்திவிட்டார். அப்போது நாங்கள் லட்சுமணபுரிச் சிறையில் இருந்தோம். யாரோ சில அறியாதவர்கள், என்னவோ செய்தார்கள் என்பதற்காக ஒரு பெரிய இயக்கத்தை நிறுத்துவதா? இதென்ன அர்த்தமில்லாமல் இருக்கிறதே என்று ஆத்திரப்பட்டோம். கோடிக்கணக்கான மக்கள் உள்ள நாட்டில் பூரணக் கட்டுப்பாட்டை எதிர்பார்த்தால் எந்த இயக்கமும் வெற்றி பெறாது என்று நினைத்தோம்.

ஆனால் காந்தியடிகளின் முடிவுதான் சரியானது என்று பின்னர் உணர்ந்தோம். எங்களைவிட அவர்தான் விவேகி என்பதை அனுபவத்தில் உணர்ந்தோம். அவர் திறமை மிக்க சேனாதிபதி. மக்களிடையே கட்டுப்பாடு இல்லை என்பதை அவர் உணர்ந்தார். தமது சொற்படி இயக்கம் நடத்தப்பெறவில்லை என்பதை அறிந்ததும் இயக்கத்தை நிறுத்தி விட்டார். இதனால் விபரீதம் ஏற்படும் என்பதை அவர் உணர்ந்தார்.

சாத்விகத்தையும் பலாத்காரத்தையும் கலக்கக்கூடா தென்பதில் அவர் உறுதியாய் இருந்தார். இரண்டையும் கலந்தால், ஒன்றை ஒன்று அழித்துவிடும். அதனால் ஒரு பலனும் ஏற்படாது. ஆயுதமில்லாத மக்கள் பலாத்காரத் தில் ஈடுபடுவதென்றால் அது நம்மை அழித்துவிடும். கட்டுப்பாடு சரியாக இல்லை என்று தோன்றியபோதெல் லாம் காந்தியடிகள் இயக்கத்தை நிறுத்திக் கொண்டிருந் தார். சாத்விகப் படை, போருக்குப் புறப்படத்துடித்துக் கொண்டிருக்கும். ஆனால் எங்கேயாவது சிறு தவறு தென்பட்டாலும் 'நில்' என்று உத்தரவிட்டுவிடுவார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் காந்தியடிகள் தமது தண்டி யாத்திரையை ஆரம்பித்தார். கடற்கரையில் போய் உப்பு எடுக்கவேண்டும் என்று சொன்னார். உப்பு எடுப்பதா? என்ன அர்த்தமில்லாமல் இருக்கிறதே என்று பலர் நினைத்தோம். வீரத்தனமாக ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்தோம். கூச்சல் போட வேண்டும்; கொடிகளுடன் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும் என்றெல் லாம் விரும்பினோம். அப்படியிருக்க 'உப்பு எடுங்கள்' என்று காந்தியடிகள் கூறியபொழுது, எங்கள் வேகம் குறைய ஆரம்பித்தது. ஆனால் கட்டுப்பாட்டுக்கு உட் பட்டவர்கள் என்ற முறையில், அவர் சொன்னபடியே உப்பு எடுத்தோம். தண்டியை நோக்கி அவர் சென்று கொண்டிருந்தபொழுது, இந்தியாவின் சூழ்நிலையே மாறி விட்டது. கட்டுப்பாடான முறையில் இந்தியா முழுவதும் உப்புச்சட்டம் மீறப்பெற்ற விதம் வியக்கத்தக்கதாக இருந்தது. இதென்ன அர்த்தமில்லாத இயக்கம் என்று நினைத்தது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத் தையே உலுக்கி விட்டது.

முப்பத்தாறு கோடி மக்கள் நினைத்ததையும் காந்தியடிகளால் எண்ணிப் பார்க்க முடிந்தது. 1942 ஆம் ஆண்டில் ஒரே ஒரு மனிதரைக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று அவர் முடிவு செய்தார். உலக யுத்தம் நடந்துகொண்டிருந்த சமயத்தில் ஒரு தனி மனிதர்—விநோபாஜியைக் கொண்டு சத்தியாகிரகம் செய்ய முடிவு செய்தார். இந்தத் தனிமனிதர் சத்தியாக்கிரகம் செய்தால் உலகமா முழுகிப்போகும் என்று பலர் ஆச்சரியப்பட்டார்கள். இதனால் ஏதாவது நன்மை கிடைக்குமா என்று திகைத்தார்கள். இரண்டாவதாக சத்தியாக்கிரகம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இந்தத் தனி நபர் சத்தியாக்கிரகம் மக்களிடையே சுதந்திரக் கனலை மூட்டியது. இது ஒரு புரிந்து கொள்ளாத புது வழியாக இருந்தது. ஆனால் இந்தச் சத்தியாக்கிரகத்தில் மருந்துக்குக் கூட ஒழுங்கீனம் இல்லை.

காந்தியடிகளின் தலைமையில், அவருடைய நிழலில் நாம் வாழ்ந்தோம். அவர் நம்மைக் கட்டுப்பாடு உடையவர்களாகச் செய்தார். அவருடைய சீரிய தலைமையில் இறுதியில் சுயராஜ்யம் பெற்றோம். கட்டுப்பாடு இருந்ததாலேயே சுயராஜ்யம் பெற முடிந்தது.

# கொய்த மலர்கள்

**காந்தியடிகள்**

1. பணிவே உருவானாய்! ஏழையர் பழங்குடில்
தோறும் எழுந்தருளும் பரனே!
கங்கை காவிரி முதலாய ஆறுகள் வளந்தரும்
எழில்மிகு இந்நாடு முற்றிலும் உன்னைத்
தேடியலையும் வரம் கொடு.

2. எப்பொருள் யார் வாய்க் கேட்பினும், அதன் மெய்ப்
பொருள் உணரும் வெள்ளுயிர் எமக்கருள்
இந்நாட்டினர் தம் சுகதுக்கங்களில் நாங்களும்
கலந்து வாழும்
திறனும் பணிவும் அடியோர்க்குத் தந்தருள்வாய்.

3. பாத தூளியிலும் இழிந்தாராய்க் கருதுவோர்க்கே
சரணம் தரும் பரமா!
எங்கள் கோடிக் கணக்கான மக்களுடன் இணை
பிரியாது நின்று
நட்பும் பணிவும் பூண்டு நலம் செயும் உளம்
எமக்குத் தருவாய்.

4. யாம் எமது என்பதை வேர்முதல் மாய்த்து,
தியாகமே வடிவாகி,
எங்கள் வாழ்வில் சத்துவமும் பணிவும் நிறைந்து,
இப்பெரு நாட்டின் மர்மம் புரிந்து, அதற்குப் பக்தி
யுடன் பணிபுரியும் உயர்நிலை எமக்கு அருள்வாய்.

வெளியிலிருந்து விதிக்கப் பெறும் கட்டுப்பாடுகள் வெற்றி பெறுதல் அருமை. ஆனால் அவற்றைத் தமக்கு நாமே விதித்துக் கொள்ளும்போது நல்ல பயன் அளிக்கின்றன.

எந்த விதமான தன் மறுப்பும் ஆத்ம நலம் தருவதாகும்.

ஒருவனுடைய கடமை என்னவென்று தெளிவாக உணருதல் எப்போதுமே சாத்தியமாய் இருப்பதில்லை. சத்திய உபாசகன் அடிக்கடி இருட்டில் தடவவேண்டியவனாகிறான்.

மனிதன் தனது செயல்களுக்கு எவ்வளவு தூரம் எஜமானன், எவ்வளவு தூரம் சந்தர்ப்பங்களுக்கு அடிமை, சொந்த முயற்சி எந்த அளவுக்குப் பயன்படும், விதி எவ்விடத்தில் குறுக்கிடுகிறது—முதலிய விஷயங்கள் நம்மால் அறியக்கூடாத ரகசியங்களாக இருக்கின்றன. என்றும் அவை மர்மமாகவே இருக்கும்.

மனிதனுக்குக் கெட்ட குணங்கள் எளிதில் படிவது போல, நல்ல குணங்கள் படியா.

மற்ற எல்லா விஷயங்களிலும் ஜனங்களின் வாக்குறுதியை நம்பலாம். ஆனால் பண விஷயம் ஒன்றில் மட்டும் நம்புவதற்கில்லை. கொடுக்க ஒப்புக் கொண்ட தொகையைத் தாமதமின்றிக் கொடுக்கும் மனிதரை நான் கண்டதே கிடையாது.

ஒருமுறை ஏற்பட்டுவிட்ட பிளவு, பின்னர் எவ்வளவுதான் ஒட்டுப்போட்டாலும் முன்போலாகி விடுமா?

மகிழ்ச்சி இல்லாமல் செய்யும் தொண்டினுல், அதைச் செய்பவனுக்கேனும் ஏற்றுக் கொள்பவனுக்கேனும் நன்மை கிடையாது. ஆனுல் மகிழ்ச்சியுடன் செய்யப் பெறும் தொண்டிற்கு முன்பு மற்ற இன்பங்களும் சுக போகங்களும் சூரியன் முன்பு மின்மினியாகின்றன.

மேனுட்டைப் போல, விருந்துண்ணல் ஓர் அருங் கலையாக ஆக்கப்பெற்றிருப்பது வேறெங்கும் இல்லை.

சுவை என்பது நாவில் இல்லை; மனத்திலேயே இருக்கிறது.

நடந்துபோன நிகழ்ச்சிகளின் நியாய அநியாயங் களைப் பற்றிய விசாரணையில் இறங்குவது வீண் வேலை யாகும். ஆனுல் அவற்றை உள்ளபடி அறிந்துகொள்ள லும், கூடுமானுல் வருங்காலத்துக்கு அவற்றினின்றும் படிப்பினை கற்றுக் கொள்ளுதலும் பயனுடையதாகும்.

எதிரிகளுக்கு நியாயம் செய்வதினுல் மட்டும் நாம் விரைவில் நியாயம் பெற முடியும்.

ஒரு மதம் விட்டுப் பிறமதம் புகுந்தவன், புதிய மதத் தினிடம் அதிலேயே பிறந்து வளர்ந்தவர்களைவிட அதிக மான பற்றுக்கொண்டிருப்பது இயல்பு,

வேண்டுமென்றே தன்னை யறியாமலோ உண் மையை மறைத்தும் திரித்தும் மிகைப்படுத்தியும் கூறும் குணம் மனிதனுக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள ஒரு பெருங் குறையாகும்.

பொதுஜன வாக்கு, தெய்வ வாக்காகும்.

வார்த்தைகளை எண்ணிப் பேசுவோன், யோசனையற்ற மொழிகளைக் கூறமாட்டான். பேசுவதற்கு ஆசைப்படும் எத்தனையோ பேர்களை நாம் காண்கிறோம். எந்தக் கூட்டத்திலும் சரி ஜனங்கள் பேசுவதற்கு அனுமதிக் கோரும் சீட்டுக்களை அனுப்பிக் கூட்டத் தலைவரைத் தொந்தரவு செய்யாமல் இருப்பதில்லை. அனுமதியளித்தால் பேசுகிறவர் காலவரையறையைக் கடந்து விடுவதும் இன்னும் கொஞ்ச நேரம் கேட்பதும், அனுமதியில்லாமல் பேசிக் கொண்டே போவதும் சர்வ சாதாரணம். இப் பேச்சுக்களால் உலகத்துக்கு எவ்வித நன்மையும் விளைவதாகச் சொல்ல முடியாது.

தன்னலம் மனிதனைக் குருடனாக்கி விடுகிறது.

தற்கால மனிதர்களில் என் உள்ளத்தைக் கவர்ந்து என் வாழ்க்கையின் போக்கைச் சமைத்தவர் மூவர். ராய் சந்தர் தமது ஒழுக்கமுள்ள வாழ்க்கையினாலும், டால்ஸ்டாய் "ஆண்டவன் ராஜ்யம் உனக்குள்ளே" என்ற புத்தகத்தாலும், ரஸ்கின் என்பார் "முடிந்தநிலை" என்ற நூலினாலும் எனது வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாயினர்.

உண்மை நட்பு என்பது ஆன்ம ஒருமைப்பாடு.

ஆத்ம சாதனத் துறையில் குருவின் முக்கியத்துவத்தைப் பற்றிய இந்து மதக் கொள்கையில் எனக்கு நம்பிக்கை உண்டு. குரு உபதேசமின்றி ஒருவன் மெய் ஞானம் பெறமுடியாது என்னும் தத்துவத்தில் பெரிதும் உண்மை இருக்கிறது. உலகியல் கல்விப் பயிற்சிக்கு வேறு வழியில்லாவிடில், அரை குறையாகத் தெரிந்த உபாத்தியாயரிடமே செல்லலாம். ஆனால் பாரமார்த்திக ஞானம் பெறுவதற்கு இது கூடாது. அதற்குப் பரிபூரண ஞானியையே குருவாகக் கொள்ள வேண்டும்.

பொறுமை, காரண காரியங்களை ஆராய்வதில்லை.

கடவுளுக்குப் புதல்வர்கள் இருக்கக்கூடுமானால்; நாம் எல்லோரும் அவருடைய புதல்வர்களே.

ஆண்டவனை அறிதல் தொண்டின் மூலமாகவே இயலும் என்று நான் உணர்ந்தேன். ஆதலின் தொண்டு செய்யும் மதத்தையே என்னுடைய மதமாகச் செய்து கொண்டேன். என்வரையில், தொண்டு என்பது நாட்டின் தொண்டேயாகும்.

மதமும் ஒழுக்க நெறியும் ஒன்றே.

பகைவர்கள் என்று கூறப்படுவோர், துஷ்டர்கள் என்று எவ்வாறு கூறமுடியும்? அவர்கள் பகைவர்கள் என்பதால் அவர்கள் செய்வதே தவறு என்று எப்படி ஏற்படும்?

எந்த விஷயத்தையும் தூரத்திலிருந்து கேள்விப் பட்டால் அது உள்ளதைவிடப் பெரிதாகத் தோன்றும்.

மனைவி கணவரிடம் காட்டும் அன்பைவிட, வேலைக் காரன் எஜமானனிடம் காட்டும் விசுவாசம் ஆயிர மடங்கு பாராட்டுதற்குரியது.

''இயற்கைக் குணத்தை மாற்ற யாரால் முடியும்?'' என்று ஒரு முதுமொழி யுண்டு. பிறப்புக்கு முன்னுலி ருந்தே ஏற்பட்டுவிட்ட குணங்களைக் கைவிடுதல் எளி தன்று. தான் வளர்ச்சி பெற்ற வழியே, தன் புதல்வர் களும் தன் பாதுகாப்பில் உள்ளவர்களும் வளர்ச்சி யுறு வார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் ஆசையே யாகும். பெற்றோராய் இருப்பது எவ்வளவு பயங்கரமான பொறுப்பு?

குற்றத்தை மறைப்பதற்கு ஒருவனுடைய புத்தி கூர்மையை உபயோகப்படுத்தலாம் என்று கண்டேன். எனவே புத்தியினிடமே எனக்கு அருவருப்பு உண்டாயிற்று. வக்கீல் தொழில்மீது அப்போது தான் எனக்குப் பெரு வெறுப்பு ஏற்பட்டது.

உண்மைக்கு விரோதமில்லாமல் வக்கீல் தொழில் நடத்துவது சாத்தியமன்று. ஆனால் வக்கீல் தொழிலில் உண்மையைக் கடைப்பிடித்தாலும் கூட, அத்தொழிலே அடிப்படையில் தீமையானது.

சமூக ஊழியத்துக்கே வாழ்நாளைச் செலவிட வேண்டுமாயின் பிள்ளைப் பெற்றில் அவாவையும் பொருளாசையையும் அறவே ஒழித்துக் குடும்பக் கவலைகளினின்றும் நீங்கிய வானப் பிரஸ்த வாழ்வை மேற்கொள்ள வேண்டும்.

ஒருவனுக்கு எவ்வளவு அதிகமான வேலை யிருந்த போதிலும் சாப்பாட்டுக்குச் சாவகாசம் ஏற்படுத்திக் கொள்வதுபோல் உடற்பயிற்சிக்கும் சாவகாசம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பிறரை ஏமாற்ற முயல்வோன். தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான்.

குற்றம் செய்வது அவமானமே; அதற்காகச் சிறை செல்வது அவமானம் அன்று.

மரியாதை என்பது அந்தந்தச் சமயத்துக்குக் கைக் கொள்ளும் பேச்சு நயம் மட்டும் அன்று. எதிரிக்கும் நன்மை செய்ய வேண்டும் என்னும் அந்தரங்க விருப்பமும் மனப்பூர்வமான பெருந்தன்மையுமே உண்மையான மரியாதையாகும்.

ஒருவன் தன்னுடைய தவறுகளை மிகைப்படுத்தியும் பிறருடைய தவறுகளைச் சிறிதாக்கியும் பார்க்கப் பயின்ருல் மட்டுமே இரண்டையும் நியாயமாக மதிப்பிடக் கூடும் என்பது என் கொள்கை.

ஒருவனுடைய குணத்தை நிர்ணயிக்க, அவனுடைய வெளிப்படையான நடத்தை மட்டும் போதிய ஆதாரமாக மாட்டாது.

ஜனநாயகக் கொள்கையை உண்மையில் பாதுகாக்க வேண்டுமாளுல் மக்கள் தீவிர சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் ஒருமை உணர்ச்சியும் கொண்டவராய் இருக்க வேண்டும்.

தாழ்மைக் குணத்தின் இறுதி எல்லை அஹிம்சையாகும்.

ஒருவன் தன்னுடைய சொந்த விருப்பத்திஞல், தன்னைத் தன் சகோதர உயிர்ப் பிராணிகளுக்கெல்லாம் கடையஞகக் கருதாத வரையில், அவனுக்கு மோட்சமில்லை.

குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட மனிதன் எவ்வாறு நடந்து கொள்வான் என்று நிச்சயமாகக் கூறுதல் கடினம்.

அன்பு என்னும் ஆயுதத்திஞல் தகர்த்து எறிய முடியாத தடையும் உண்டோ?

பொது ஊழியத்தில் ஈடுபட்டவன், தானே ஆராய்ந்து உண்மை யென்று தேருத விஷயங்களைச் சொல்லக் கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாகச் சத்திய உபாசகன் மிகவும் எச்சரிக்கை உடையவஞக இருத்தல் வேண்டும்.

தான் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளாத விஷயத்தைப் பிறர் நம்பும்படி செய்வது சத்தியத்துக்கு ஊறு செய்வதாகும்.

உண்மையாளனை ஒருவன் எச்சரிக்கை உடையவனாகவும் இருத்தல் வேண்டும்.

முற்பிறப்பின் வாசனைகள் பிறருடைய உதவியில்லாமல் செய்து விடுகின்றன.

தூய அன்பினால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. ஒருவனுடைய நோக்கம் மட்டும் தூயதாய் இருந்தால், அவனை இறைவன் முடிவில் காத்தருள்வான்.

இறைவனது நண்பனாக இருக்க விரும்புவோன் இவ்வுலகில் தன்னந்தனியனாக இருக்க வேண்டும்.

நன்றாகச் சிந்தித்துப் பார்த்தோமானால், ஜாதி இனம் என்னும் வேறுபாடுகள் கற்பனையே என்று விளங்கும். உண்மையில் நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே யாவோம்.

நல்ல காரியம் எதுவும் முடிவில் பயனளித்தே தீரும்.

என்னுடைய சகோதரரின் துன்பங்களுக் கெல்லாம் காரணம், அவர் என்னிடம் வைத்திருந்த அபார அன்பே யாகும்.

புற வாழ்க்கையில் உண்டாகும் மாறுதலைக் காட்டிலும், உள்ளத்தில் உண்டாகும் மாற்றமே முக்கியம்.

மணமக்களுக்குள் இதய ஒற்றுமை ஏற்பட்டிருக்கும் போது பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டுக் கல்யாணத்தைத் தள்ளிவைத்தல் சரியன்று. வறுமை,

கல்யாணத்துக்கு ஒரு தடையானால், ஏழைகள் கல்யாணமே செய்து கொள்ள முடியாது.

உடலின் உறவைக் காட்டிலும் ஆன்ம உறவு மிக மேன்மை பொருந்தியது.

யுத்த வீரர்கள், யுத்த ஊழியம் செய்பவர்கள் என்னும் வேற்றுமை நான் பாராட்ட வில்லை. கொள்ளைக் காரரின் மூட்டை தூக்கவும், அவர்கள் கொள்ளையிடும் பொழுது காவல் இருக்கவும், அவர்கள் காயம்பட்டால் பணிவிடை செய்யவும் ஒப்புக் கொள்பவன், கொள்ளைக் காரர்களைப் போலவே கொள்ளைக் குற்றத்துக்கு ஆளாகிறான். அதே மாதிரியாக, யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்குப் பணிவிடை செய்வோரையும் யுத்தக் குற்றம் சாராமல் விடாது.

சபதம் எத்துணைத் தெளிவானதாய் இருப்பினும் மக்கள் தங்களுக்கு அனுகூலமாக அதைத் திரித்துப் பொருள் கொள்கிறார்கள். மக்கள் சமூகத்தில் எல்லா வகுப்புக்களிலும், அரசன் முதல் ஆண்டி வரை இத் தகையோரைக் காணலாம். சுயநலத்தினால், அவர்கள் குருடர்களாகித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதல்லாமல் உலகத்தையும், கடவுளையும் ஏமாற்ற முயலுகிறார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் யார் முன்னிலையில் சபதம் செய்யப்படுகிறதோ, அவர்கள் கூறும் விளக்கத்தை உண்மையாக ஏற்றுக் கொள்வதே சிறந்த முறையாகும். இரு பொருள்கள் தரக்கூடிய சபதங்கள் விஷயத்தில் பலத்தில் குறைந்தவர்களின் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளுதல் அடுத்தபடியான முறை. இவ்விரண்டு முறைகளும் நிராகரிக்கப்பட்டால், அசத்தியத்தில் வேர் கொண்டவையான சச்சரவும் அநீதியும் விளையும்.

எந்த அமைப்புக்கும் வரவு செலவுக் கணக்கு ஒழுங்காக வைத்திருத்தல் இன்றியமையாத ஒன்றாகும். இன்றேல், அந்த ஸ்தாபனம் விரைவில் கெட்ட பெயர் எடுக்கும் என்பதில் ஐயமில்லை.

பொதுவேலைகளில் சில்லரைச் செலவுகளே பெருந்தொகைகள் ஆகிவிடும்.

மனிதர்கள் தங்கள் சகோதரர்களைத் தாழ்மைப் படுத்துவதனால், தங்களுக்குச் சிறப்பு வருவதாக எண்ணுவது எப்படி என்னும் பெரு மர்மம் இன்னமும் எனக்குப் புலனாகவில்லை.

செல்வம், அதிகாரம், மதிப்பு இவற்றின் பொருட்டு மாந்தர் எத்தனை எத்தனைப் பாவங்களுக்கும் அநீதிகளுக்கும் உள்ளாக வேண்டியிருக்கிறது.

கடமைகளைச் செய்வதற்குப் பலன்களை எதிர்பார்த்தல் கூடாது.

பகவானுக்குப் பயந்து நடந்து, அவரை நேருக்கு நேர் காண விரும்புவோனுக்கு, எண்ணத்தையும் பேச்சையும் கட்டுப்படுத்தல் எவ்வளவு அவசியமோ அவ்வளவு உணவின் தன்மையிலும் அளவிலும் கட்டுப்பாடு செய்தல் அவசியமாகும்.

பளிங்குபோல் மாசற்ற நடத்தையும் போர் வீரனையும் வெட்கச் செய்யும் தைரியமும் உடைய சில பெண்மணிகளுடன் பழகும் பாக்கியம் நான் பெற்றிருந்தேன். அன்பர் வெஸ்டின் மனைவி ஓர் அழகிய இளம் பெண், உடலின் அழகைக் குறிப்பிடவில்லை. முதன் முதல் நான் அவரைச் சந்தித்தபோது, அவர் உள்ளத்

தின் அழகு என்னைக் கவர்ந்துவிட்டது. இதயத் தூய்மையே உண்மை அழகன்றோ?

இமய மலையை அளப்பதில் உள்ள இன்பம், வெற்றி மகிழ்ச்சி ஆகியவை நிரந்தரமானவையன்று. தன்னைத் தானே வெற்றி கொள்வதில் பேரானந்தம் உண்டு. இந்த ஆனந்தம் குறைபடாமல் வரவர வளர்ந்து கொண்டே இருக்கும்.

மணம் வேலிபோல இருந்து மதத்தைப் பாதுகாக்கிறது. வேலியை அழித்துவிட்டால் அது சிதைந்து சின்னா பின்னப்பட்டுவிடும். மரத்தின் ஆணிவேர் கட்டுப்பாடு; மணம் என்பது கட்டுப்பாடேயன்றி வேறல்ல.

தொண்டுக்குத் தொண்டே வெகுமதி.

மனிதன் விரதம் எடுத்துக்கொள்ளாமையே அவனை ஆசை வலையில் விழச் செய்கிறது.

உடல் வலிமை யுள்ளவர்களுக்குப் பிச்சை கொடுத்தல் முற்றிலும் தவறு.

பெரியவர்களுடைய குறைகளைப் பொறுத்தவரையில் குருடனாய் இருப்பது என் இயல்பு.

எனது மனைவியின் கடமையை எனது உரிமையாக நினைத்துக் கொண்டேன்.

பொய் சொல்லுவது என்பது என்னால் இயலாத காரியம். இந்த ஒரு குணந்தான், நான் பல முறையும் படுகுழியில் வீழாமல் காப்பாற்றியது.

உண்மையில் எனது சங்கோஜ குணம் பலவித அபாயங்களிலிருந்து என்னைக் காப்பாற்றும் கேடயமாக இருந்து வந்திருக்கிறது.

பகிரங்கமாகச் செய்யக்கூடாத ஒரு காரியத்தை ரகசியமாகச் செய்தல் என் இயல்புக்கே முற்றிலும் மாறானதாகும்.

என்னுடைய சொந்தக் குறை எதற்காகவும் நான் நீதிமன்றத்துக்குப் போனதில்லை.

மனச்சான்று வழி நடப்பதில் எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. அதற்கு மாறாக எதுவும் செய்தல் எனக்கு மிகுந்த துயரத்தை அளிப்பதோடு மிகவும் கஷ்டமாகவும் இருக்கும்.

எவனொருவனையும் வேலைக்காரனாகப் பாவித்து வேலை வாங்கி நான் அறியேன்.

பிரிட்டிஷ் அரசாட்சியினிடம் எனக்கிருந்த அளவு விசுவாசமுடைய வேறொருவரை நான் கண்டதில்லை.

நாள் முழுதும் உழைத்துக் களைத்துப் போன பின்னரே படுக்கச் செல்வதென்று உறுதி கொண்டேன்.

பொது ஊழியத்தில் ஈடுபட்டோர், விலையுயர்ந்த வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடாது என்பது என் உறுதியான அபிப்பிராயமாகும்.

என்னைப் படைத்த கடவுளே, என் மனைவியையும் குழந்தைகளையும் படைத்தார். ஆதலின் அவர்களை அவரே காப்பாற்றுவார் என உறுதி கொண்டிருந்தேன்.

ஒரு கொள்கையைப் பரப்புவது என்றால் அதற்கு நான் ஒரு வழியைக் கடைப்பிடிப்பது வழக்கம். என்னுடைய சொந்த வாழ்க்கையில் அக்கொள்கையை அனுசரிப்பதன் மூலமாகவும், அறிவு வளர்ச்சியில் பற்றுள்ளவர்களுடன் விவாதிப்பதன் மூலமாகவுமே, எந்தக் கொள்கையையும் பரப்பி வருவேன்.

என் வாழ்நாளில் நான் கடன் பட்டதே கிடையாது. கடன் படுதலை மனதார வெறுத்து வந்திருக்கிறேன்.

நான் செய்வது எதையும் மூடுமந்திரமாகச் செய்வதில்லை.

எனது கட்டுரைகளில் ஒரு வார்த்தையேனும் யோசனையின்றி எழுதியதாகவாவது, வேண்டுமென்று மிகைப் படுத்தியோ, பிறரை மகிழ்விப்பதற்காகவோ எழுதியதாகவாவது எனக்கு ஞாபகமில்லை.

ஒற்றுமைக்குத் தடையான காரணங்களை நீக்குவதற்கு ஏற்படும் சந்தர்ப்பம் எதையும் நான் கை நழுவ விடுவதில்லை.

என்னிடம் இயலாத எந்த நற்குணத்தையும் இருப்பதாகப் பாவித்து நடிக்க என்னால் முடியாது.

குழந்தைகளின் மத்தியில் விளையாடிக் கொண்டிருப்பதைப்போல, எனக்கு மகிழ்ச்சி தருவது வேறொன்றுமில்லை.

முகஸ்துதி செய்வதன் மூலமாகவோ, சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்கும் முறையிலோ, மனிதர்களைச் சிநேகிதனப் படுத்துவது என் இயற்கைக்கு விரோத

உடலுழைப்புக்குத் தேவையான வேலைகளை எல்லாம் நாமே செய்து கொள்ளவேண்டும் என்னும் ஆவல் வளர்ந்தது.

ஒரு சமயத்தில், உயிர் வாழும் ஆசை, சத்தியப் பற்றினும் வலிமை மிக்கதாகி விட்டது.

சத்திய தரிசன முயற்சியில் என்னுடைய அனுபவங் களும், சோதனைகளும், எனக்கு ஜீவசக்தியும் ஆனந்தமும் அளித்து என்னைக் காப்பாற்றி வருகின்றன.

ஏழையினும் ஏழையாக ஜனங்களைப்போல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது என் அவா.

"சீர்திருத்த" வெறியினால் குருடன் ஆனேன்.

சுருட்டுக் குடிக்கும் வழக்கம் அநாகரிகமானது; அருவருப்பானது; தீமை பயப்பது. உலக முழுவதிலும் சுருட்டுப் பைத்தியம் ஏன் இவ்வளவு பரவியிருக்கிறது என்று எனக்குப் புலப்பட்டதே இல்லை. ரயிலில் சுருட்டுக் குடித்துக் கொண்டிருக்கும் மக்கள் அதிகமாக உள்ள பெட்டியில் என்னால் பிரயாணம் செய்ய முடிவதில்லை. அத்தகைய இடங்களில் எனக்கு மூச்சுத் திணறிப் போகும்.

இவ்வுலகில் எவர்க்கும் நான் அஞ்சேன்; ஆண்ட வன் ஒருவனுக்கே நான் அஞ்சி நடப்பேன்; எவரிடத் தும் பகைகொள்ளேன்; எவரது அநியாயத்துக்கும் இணங்கேன்; அசத்தியத்தைச் சத்தியத்தால் வெல் வேன்; அசத்தியத்தோடு போராட எல்லாத் துன்பங்களை யும் ஏற்பேன்.

எனது மனச்சான்றுக்கு ஒவ்வாத ஒரு சட்டத்தை என் தந்தையார் நிறுவினும், 'அதற்கு நான் கீழ்ப்படியேன்' என்று சொல்லி, நடக்கும் வழியில் எனது அன்பைப் புலப்படுத்துவேன்.

நான் அரசியல் வாதியா? சமய வாதியா? நான் அரசியல் நாடகம் நடிக்கும் ஒரு சமயவாதி.

கடவுளிடத்திலும், அவரது வல்லமையினிடத்திலும், அவரது அன்பினிடத்திலும் எனக்குள்ள உறுதியை அசைத்தல் முடியாது. குயவன் கையிலுள்ள களிமண் போல நான் இருக்கிறேன்.

உலகிலுள்ள பெருமைச் சமயங்களில் எதைக் குறை கூறுவதிலும் நான் கலந்து கொள்ளேன்.

ஒரு வேலையை ஏற்றுக் கொண்டால், அதில் முழுதும் ஈடுபடுதல் எனது வழக்கம்.

# புல்லிலிருந்து ரொட்டி

உணவு உற்பத்தியை மேலும் மேலும் பெருக்கி, தன்னிறைவு பெறுவதெற்கெனப் பாரத நாடு முழுமுச்சில் முயற்சி மேற்கொண்டிருக்கும் இந்நாளில் "முன்பு ஓர் அருகு புல் விளைந்த இடத்தில் இன்று இரண்டு அருகு புல் விளைவிப்போம்" என்பது ஒரு லட்சிய வாசகமாகி விட்டது. 'புல்' என்ற வார்த்தை 'உணவு' என்ற கருத்துடன் உபயோகிக்கப் பெறுவதாகும். ஆனால் விவசாய விஞ்ஞானத் துறையில் கடைசியாய்க் கண்டு பிடிக்கப்பெற்றுள்ள முறைகளின் விளைவாக, அந்தச் சங்கேதச் சொல் இன்று உண்மையாகவே 'புல்' என்ற கருத்துடனேயே உபயோகிக்கப்படலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் புல் விளைச்சலை அதிகமாக்குவதென்றால் உணவு விளைச்சலைப் பெருக்குவது என்று அர்த்தம். ஏனென்றால், புல்லிலிருந்து மனிதர்களுக்கு ரொட்டி தயாரிக்க முடியும் என்று மேற்கு ஜெர்மனி விஞ்ஞானி ஒருவர் நிரூபித்திருக்கிறார்.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பேராசிரியர் ஜஸ்டஸ் லிபிக் என்னும் புகழ் மிக்க ஜெர்மன் ஆராய்ச்சி, ரசாயன அறிஞர், செயற்கை ரசாயன உரங்களைக் கண்டுபிடித்து உலகத்துக்கே பெரும் பணி செய்தார். பல தலைமுறைகளாக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி, ஒரு நூற்றாண்டுக் காலத்தில், தானியங்களின் அளவிலேயே பெரும் மாறுதலை உண்டாக்கி விட்டார்கள்; விவசாயத் துறையில் விஞ்ஞானம் பயன்படத் துவங்கியதற்கு முன்பு இருந்ததைப் போல இரண்டு மடங்கு அதிகமான தானி

யங்கள் இப்போது விளைகின்றன. ஆனால் புல் விளையும் நிலங்களின் விஷயத்தில் நிலைமை இவ்வளவு திருப்திகரமாயில்லை. சென்ற ஒரு நூற்றாண்டுக் காலத்தில் புல் விளைச்சலின் அளவு மூன்றில் ஒரு பகுதிதான் அதிகமாகியிருக்கிறது.

மனிதனின் இப்போதைய போஷணை நல்லபடியாயில்லை. வருங்கால போஷணை குறித்தும் பெருங் கவலை ஏற்பட்டிருக்கிறது. இங்கிலையில் பேராசிரியர் எச். எச். ஷ்லுபாக் என்னும் இன்னொரு ஜெர்மன் ரசாயன அறிஞர், புல்லில் உள்ள உணவுச் சத்து பற்றி சென்ற பத்தாண்டுக் காலத்துக்கும் அதிகமாய்த் தீவிர ஆராய்ச்சி நடத்தி வந்திருக்கிறார். முன் நாளில் லீபிக் நிகழ்த்திய சாதனையைப் போல், பரபரப்புக் கொடுக்கக் கூடிய பெரும் சாதனை ஒன்றை இந்தத் துறையில் தம்மால் நிகழ்த்திக் காட்ட முடியும் என்று நம்புகிறார். புல்லில் உள்ள கார்போ ஹைட்ரேட் சத்தின் அமைப்பையும், அதில் ஏற்படும் மாறுதல்களையும் கவனித்து வந்து அதன் மூலம் பலன் மிக்க பல உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியும்.

பேராசிரியர் ஷ்லுபாக் தெற்கு ஜெர்மனியின் அழகு மிக்க பகுதி ஒன்றில், தாமே 'சொந்தமாக மாதிரிப் பண்ணை ஒன்று அமைத்துக் கொண்டு, நடைமுறையில் காண்பதையும், சொல் வடிவிலான சித்தாந்தங்களையும் அதில் காரியத்தில் பயின்று காட்டுகிறார் அவர் ஆராய்ந்து கூறும் உண்மைகளை மியூனிக் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றில் பரிசோதித்துப் பார்த்து உறுதி செய்திருக்கிறார்கள். புல்லில் இருக்கும் சர்க்கரைப் பொருள் சத்து நிறைந்தது என்றும், உணவு நெருக்கடிக் காலங்களில் உபயோகிக்கக் கூடிய மலிவான, பயன்மிக்க உணவுப் பொருளாக அதைச் சேமித்து வைக்க முடியும்

என்றும் கருதுகிறார். அவருடைய கருத்து ஊன்றி கவனிக்கத் தக்கது; ஏனென்றால் கிட்டத்தட்ட முந்நூறு கோடி மக்களின் சத்துணவுப் பிரச்னை சம்பந்தமாய்த் தீவிரக் கவலை இருந்து வருகிறது; உலகின் மக்கள் தொகை விடாமல் பெருகி வரும் இந் நாளில், இது பெரும் பயன் தரக்கூடிய சித்தாந்தம். வருங்காலத்தில் மக்கள் தொகை விரைவாக மேலும் மேலும் பெருகும் என்பதால் இந்தக் கருத்துக்கு முக்கியத்துவம் அதிகமாகிறது.

## சத்து மிக்க சாதனம்

உலகில் நிலப் பகுதியில் மூன்றில் இரண்டு பாகம் புல் வளரும் பூமியாகும். இந்தப் புல் நிலத்தில் பெரும் பகுதி சரியானபடி உபயோகிக்கப்பெறுவதில்லை. புல் பயிர் செய்யப்பெறும் இடங்களில் கூட விளைச்சல் மிகக் கொஞ்சமாகத்தான் இருக்கிறது. இன்றையப் பொருளாதார நிலையிலும், சத்துணவு நிலையிலும் புல்லை ஆடுமாடுகளின் உணவுக்கு உபயோகிப்பது கூடாது. மனிதர்களின் உணவுச் சத்துக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிராணிகள் மூலமாக வரும் போது புல்லின் சக்தியில் கிட்டத்தட்ட முக்கால்வாசி குறைந்து விடுகிறது.

புல்லில் சத்துப் பொருள்கள் இருக்கின்றன. அதில் புரதம் தவிர, க்ளுகோஸும் இருக்கிறது. தானியங்களிலிருந்தும், உருளைக் கிழங்கிலிருந்தும் கிடைக்கும் ஸ்டார்க்குக்குப் பதிலாக இந்த க்ளுகோஸைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஷ்லுபாக்கே உயர்தர ரொட்டி ஒன்று தயாரித்திருக்கிறார்; அதில் புல் சர்க்கரைச் சத்து 20 சதவிகிதம் இருக்கிறது. உலகின் பசியைத் தீர்ப்பதற்கு ஜெர்மன் விவசாய ஆராய்ச்சி மூலம் புதிய வழி ஒன்று தோன்றும் என்று எதிர்பார்க்கலாம்.

# பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலை

லண்டன் புளூம்ஸ்பரியிலுள்ள பிரிட்டிஷ் மியூசியம் என்னும் பொருட்காட்சிச்சாலை உலகப்புகழ் பெற்றது. அங்கு தொல்பொருள்களும் பல நாகரிகங்களை எடுத்துக் கூறும் கலைப்பொருள்களும் மிகப்பெரியதொரு இலக்கிய பொக்கிஷமும் இருக்கிறது. அதனைப் பார்வையிட, உலகின் பல பாகங்களிலிருந்து மாணவர்களும், ஆராய்ச்சியாளர் களும் வருகிறார்கள். ஸ்காட்லாந்தில் பிறந்த ஹான்ஸ் ஸ்லோன் சேகரித்த அரும்பொருள்களைக் கொண்டு அது நிறுவப்பெற்றது. ஹான்ஸ் ஸ்லோன் இன்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஓர் சாதாரண குடும்பத்தில், அலெக்ஸாண்டர் ஸ்லோன் என்பவருக்கு ஏழாவது குழந்தையாகப் பிறந்தார். பூஞ்சை உடம்புள்ள ஹான்ஸ் ஸ்லோனை பதினாறும் வயதில் க்ஷயஜுரம் பற்றிக்கொண்டது. அந்த நோயால் மூன்று ஆண்டுகள் வருந்திய பிறகு, அவர் உடல் தேறி மேற்படிப்புக்காக லண்டனுக்குச் சென்றார். உடல்நலமற்று இருக்கும்போதே, அவர் ரசாயன நூல்களையும் இயற்கை வரலாற்று நூல்களையும் ஆர்வத்துடன் படிப்பதுண்டு. லண்டனில் அவர் வைத்திய கல்லூரியில் சேர்ந்து படித்தார். பிறகு பிரான்ஸுக் குச் சென்று ஆரஞ்சு பல்கலைக் கழகத்தில் எம். டி. பட்டம் பெற்றார். லண்டனில் சிறிது காலம் தொழில் நடத்திய பிறகு, ஸ்லோன், ஆல்பமார்லே பிரபுவின் வைத்திய ஆலோசகராகப் பணியேற்று 1687ஆம் ஆண்டில், ஜமைக்காவுக்குப் புறப்பட்டார்.

ஜமைக்காவில் சுமார் பதினைந்து மாதங்கள் தங்கி யிருந்தபோது, அவர் பல்வகைத் தாவரங்களை ஆராய்ந்தார் சுமார் 800 தாவரங்களைச் சேகரித்துக்கொண்டு லண்டனுக் குத் திரும்பினார். இயற்கை வரலாற்றில் ஆர்வமுள்ள ஸ்லோனுக்கு கலை ஆர்வமும் இருந்தது. கலைச் சிறப் புள்ள பொருள்களையும் அவர் சேகரித்தார். லண்டனுக்கு வந்து சிறிது காலத்திற்கெல்லாம் மேற்குடி மக்களுக்கு வைத்தியம் செய்யும் புகழ் பெற்ற டாக்டர்கள் குழுவில் அவருக்கு இடம் கிடைத்தது

ஸர் ஐசக் நியூட்டனுக்குப் பிறகு ராயல் ஸொஸைடி யில் தலைவராகப் பணியாற்றும் பேறு பெற்ற ஸ்லோனை பாரிஸ், மாட்ரிட், பெர்லின் முதலிய நகரங்களிலுள்ள அறிஞர் பேரவைகள் உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டு கௌரவித்தன. பிறகு அவர் லண்டனிலுள்ள ராயல் கலேஜ் ஆவ் பிஸிஷன்ஸ் என்ற வைத்தியக் கல்லூரித் தலை வராகப் பணியாற்றினார் தொடர்ந்து மூன்று மன்னர் களுக்கு-அரசி ஆன், முதலாம் ஜார்ஜ் மன்னர், இரண் டாம் ஜார்ஜ் மன்னர் - வைத்திய ஆலோசகராகப் பணியா ற்றிய பெருமையும் அவரையே சேரும்.

ஸ்லோன் தமது வாழ்நாளில் பல பல பொருள்களைச் சேகரித்தார். இன்ன பொருள் வேண்டும், இன்ன பொருள் வேண்டாம் என்றில்லாமல், விரும்பும் பொருளை விலை கொடுத்தாவது வாங்கும் ஆர்வமுள்ளவர். அவர் சுமார் 50,000 புத்தகங்களையும் பல நாடுகளைச் சேர்ந்த சுமார் 32,000 காசுகளையும் பதக்கங்களையும் வேறு பல அபூர்வப் பொருள்களையும் அவர் சேகரித்தார். அவைதான் பிரிட் டிஷ் பொருட்காட்சிச் சாலையை நிறுவ உதவிய அரும் பொருளாக அமைந்தன. தாம் சேகரித்த பொருள்கள் அனைத்தையும் அரசாங்கத்தார் எடுத்துக்கொள்ள வேண்

டும் என்றும், அதற்குப் பதிலாக சுமார் 20,000 பவுன்களை தம்முடைய மக்களுக்கு அளிக்கவேண்டும் என்று ஸ்லோன் தம்முடைய உயிலில் எழுதி வைத்தார். அவர் சேகரித்த பொருள்களின் மதிப்பு, அந்தக் காலத்திலேயே 50,000 பவுன்களுக்கு அதிகமாகும். அவருடைய உழைப்பையும், அவர் சேகரித்த பொருள்களின் மதிப்பையும் அறிந்த அரசாங்கத்தார் உயிலில் கண்ட தொகையை அளித்து பொருள்களை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். இதற்கான மசோதாவை 1753-54-ஆம் ஆண்டுகளில் பாரளுமன்றம் ஏற்றுக்கொண்டது.

ஸ்லோன் சேகரித்த அரும்பொருள்களையும் ஏற்கனவே அரசாங்கத்தார் வசமிருந்த வேறு சில அரும் பொருள்களையும் சேகரித்து வைப்பதற்காக புளூஸ்ம்பரியிலுள்ள மாண்டேகு ஹவுஸை அரசாங்கத்தார் வாங்கினார்கள். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அந்தக் கட்டிடத்திற்குப் பிரிட்டிஷ் மியூஸியம் எனப்பெயரிட்டு மக்கள்பார்வையிடத் திறந்து வைத்தார்கள். நாளாவட்டத்தில் உலகில் பல பாகங்களிலிருந்து தொல்கலைப் பொருள்களும் கிடைத்தன. அவற்றை வகைப்படுத்தி வைக்க வசதி செய்வதற்காக பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு, இப்போதுள்ள கட்டிடத்தை 1850 ஆம் ஆண்டில் கட்டினார்கள்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய ஸ்லோனின் முயற்சிதான் பிரிட்டிஷ் மியூசியத்திற்கு அடிகோலிற்று. ஸ்லோனை மக்கள் மறந்துவிட்டார்கள் என்றாலும் அவர் சேகரித்த பொருள்களே சிறந்த நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன. லண்டனிலுள்ள ஸ்லோன் ஸ்கொயர், ஸ்லோன் ஸ்ட்ரீட் ஹான்ஸ் பிளேஸ் முதலியவை அவருடைய நினைவாக ஏற்பட்டவைதான். ஸ்லோனுடைய முந்நூறும் பிறந்த நாள் ஆண்டான இவ்வாண்டில் அவர் பிறந்த கில்லிலே (வட அயர்லாந்து) கிராமத்தில் நினைவுச் சின்னம் ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறார்கள்.

# லியோ டால்ஸ்டாய்

நூற்றெட்டு ஆண்டுகளுக்குமுன்பு, 1852 ஆம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் "சொவ்சேமென்னிக்" என்ற ருஷ்ய இலக்கிய வானிலே புதியதோர் தாரை முளைத்து விட்டது. பின்னர் "இளமை" "வாலிபம்" என்ற பகுதிகளும் பிரசுரமாயின. சுய சரிதையைப் பின்னணியாகக் கொண்டு புனையப்பெற்ற இம்மூன்று நாவல்களும் இலக்கிய உலகை ஆட்கொண்டுவிட்டன. தலை சிறந்த எழுத்தாளர் வரிசையிலே லியோ டால்ஸ்டாயும் சேர்ந்துவிட்டார்.

மாஸ்கோவிற்குத் தெற்கில் 130 கிலோமீட்டர் தொலைவிலுள்ள யாஸ்னயா போல்யானு என்னுமிடத்தில் 1828 ஆம் ஆண்டில் பிரபு வம்சத்தில் பிறந்தார், ருஷ்ய மேதை டால்ஸ்டாய். அக்கால ருஷ்யாவில் பண்ணை அடிமை முறை இருந்தது. செல்வச் சீமான்களிடையே வாழ்ந்து வளர்ந்தபோதிலும், சுற்றிச் சூழ்ந்திருந்த வறுமை நிலை டால்ஸ்டாயின் கண்களில் படாமலில்லை. பண்ணை அடிமைகளின் அவல வாழ்வையும், பழக்க வழக்கங்களையும், மனப்பாங்கையும் ஆசாபாசங்களையும் அவர் உன்னிப்பாய்க் கவனித்தார்.

ருஷ்யாவிலிருந்த மிகப் பழைய பல்கலைக் கழகங்களில் ஒன்றான கஜான் பல்கலைக் கழகத்தில் 1844 ஆம் ஆண்டில் டால்ஸ்டாய் சேர்ந்து கீழ்த்திசை மொழிகளைக் கற்றார். ஆனால் தத்துவ விசாரணையிலேயே அவருடைய எண்ணமெல்லாம் இருந்ததால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. யாஸ்னயா போல்யானுவிற்குத் திரும்பி

வந்து வேலை செய்து கொண்டே சுயமாகப் படிக்கத் தொடங்கினார். பண்ணையடிமைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், சமூக மாற்றங்கள் செய்வதற்கும் இளைஞர் டால்ஸ்டாய் திட்டமிட்டார். ஆனால் அவற்றை அவரால் செயலாக்க முடியவில்லை.

பண்ணை அடிமை முறையும், நிலப்பிரபுக்களின் எதேச்சாதிகாரமும், ஜார் மன்னன் முதலாம் நிகொலஸின் ஆட்சியின் கொடிய அடக்குமுறையும் இளைஞர் டால்ஸ்டாயின் உள்ளத்தில் ஆருத்துயரையும் வேதனையையும் உண்டாக்கின. அப்போது காகசசில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இராணுவத்தில் சேர்ந்தார் டால்ஸ்டாய். இந்த சமயத்தில்தான் "பாலியம்" என்ற நாவலுடன் அவருடைய இலக்கியப் பணி தொடங்கியது. போரைப் பின்னணியாகக் கொண்டு பல சிறுகதைகளையும் அவர் அப்போது எழுதினார்.

கிரிமிய யுத்தமும், போர் முனையில் அவர் கண்ட காட்சிகளும் அவருடைய உள்ளத்திலே ஆழப் பதிந்து விட்டன. இராணுவ அதிகாரியாக இருந்த டால்ஸ்டாய் வீரம் செறிந்த செவாஸ்தபோல் பாதுகாப்புப் போரில் பங்கெடுத்துக் கொண்டார். அடிமை முறையை அடித்தளமாகக் கொண்ட சமூக வாழ்வு எவ்வளவு தூரம் அழுகிப் புரையோடிக் கிடக்கிறது என்பதை அங்கே நேரடியாகக் கண்டார். அதே சமயம் ருஷ்ய மக்களின் மேன்மைச் சிறப்புகளை, தமதருமைத் தாயகத்திற்காக அரும் பெரும் வீர சாகசங்களாற்றிய எளிய ருஷ்ய மக்களின் பேராண்மையை கிரிமியப் போர் ஒளியிட்டுக் காட்டியது. செவாஸ்தபோல் கடற்படைத் தளத்தைப் பாதுகாக்கப் போராடிய ருஷ்ய வீரர்களின் மாவீரம் கண்டு டால்ஸ்டாய் பரவசமுற்றார். "செவாஸ்தபோவ் கதைகள்" என்ற

நூல் வெளியாயிற்று. முதல்தரமான எழுத்தாளர் என்ற பேரையும் புகழையும் டால்ஸ்டாய்க்குப் பெற்றுத் தந்தது இந்த நூல். ருஷ்ய இலக்கியத்திற்குப் புத்துயிரூட்டி உய்விக்க வந்தவர் டால்ஸ்டாய்.

1856 ஆம் ஆண்டு இறுதியில் இராணுவத்திலிருந்து விலகினார். பின்னர் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்தார். உழைப்பாளி மக்கள் வறுமையில் கிடந்துழல்வதை அவர் அங்கே நேரடியாகக் கண்டார். ஆளும் வர்க்கங்களின் கொடிய நெஞ்சையும், பேராசையையும் வன்மையாகக் கண்டித்தார். யாஸ்னயா போல்யானாவிற்குத் திரும்பி வந்த டால்ஸ்டாயின் மனம் நிம்மதியின்றித் தவித்தது. ஆண்டை அடிமைக்கிடையே, ஏழை பணக்காரரிடையே நிலவியிருந்த பூசலையும் போராட்டத்தையும் பற்றியே அவருடைய சிந்தனை வட்டமிட்டது. எளிய விவசாயிகளுக்குக் கல்வி போதிக்க அதிக நேரம் செலவழித்தார். விவசாயக் குழந்தைகளுக்காக ஒரு பள்ளியைத் துவக்கி தாமே கல்வி கற்றுக் கொடுத்தார். ஆசிரியர்கள் பத்திரிகையையும் பிரசுரித்தார்.

விவசாய எழுச்சிகளினால் அச்சமுற்றும், பொருளாதரா அபிவிருத்திகளினால் நிர்ப்பந்திக்கப் பெற்றும் ஜார் மன்னன் ஆட்சி 1861 ஆம் ஆண்டில் பண்ணையடிமை முறையை ரத்து செய்து செய்து விட்டது. டால்ஸ்டாய் 1864 முதல் 1869 ஆம் ஆண்டு வரை பாடுபட்டு "போரும் அமைதியும்" என்ற புகழ்பெற்ற நாவல் எழுதினார். 1812 ஆம் ஆண்டில் ருஷ்யாவின்மீது படையெடுத்து வந்த நெப்போலியனை எதிர்த்து நடைபெற்ற பெரும்போரைப் பகைப்புலனாய்க் கொண்டு பின்னிப் புனையப்பெற்ற இப் பெருங் காவியம் ஈடு இணையற்றுத் திகழ்கிறது.

எழுபதாம் ஆண்டில் லியோ டால்ஸ்டாய் "அன்னு கரீனு"வை எழுதினர். இந்தக் காலத்தில்தான் அறிஞர் டால்ஸ்டாயின் கண்ணேட்டதில் பெரும் மாற்றம் ஏற்பட்ட தெனலாம். அன்றைய ருஷ்ய சமுதாயத்தில் மேலோங்கியிருந்த முறைக்கேடுகளையும் அநீதிகளையும் அவருடைய மனசாட்சியால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. எளிய - மக்களுடன் விவசாயிகளுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். கோடிக்கணக்கான உழைப்பாளி மக்கள்மீது, விரல்விட்டு எண்ணத் தகுந்த ஒரு சிலர் ஆட்சி நடத்துவதையும், அரசாங்க இயந்திரமும் மதமும் இதற்குப் பின்பலமாய் நிற்பதையும் நேரில் கண்ட டால்ஸ்டாய் நெஞ்சு பொருமினுர். இதை எதிர்த்துக் கண்டனம் செய்தார். பிரபுக்கள் உறவினின்றும் தம்மைத் துண்டித்துக் கொண்டார். அன்றிருந்த சமூக அமைப்பின் ஒழுக்க இழிவையும், பொம்மைப் பகட்டையும், நயவஞ்சகத்தையும் அம்பலப்படுத்தினுர். மனிதனை மனிதன் அடக்கி நசுக்குவதற்கு உரிமை இல்லையென்று அறைகூவினுர். அயலானை நேசி; தீமையை சாத்துவீகமாய் எதிர்த்து நில் என்ற உண்மைக் கிறிஸ்துவக் கோட்பாடுகள்தான் டால்ஸ்டாயின் தத்துவ சாஸ்திரமாயிற்று. இலக்கியத் துறையில் டால்ஸ்டாய் அடைந்திருந்த சாதனை மனித இனப் பண்பாடு வரலாற்றிலேயே மகோன்னத நிலைகளில் ஒன்ருகும்.

புத்துயிர் (1898-1904), கேளிக்கைக்குப் பின்னர் (1903) முதலிய நாவல்களையும், இருளின் ஆட்சி (1886) மெய்யறிவின் பலன்கள் (1891) என்ற நாடகங்களையும் பல சிறு கதைகளையும் பின்னர் டால்ஸ்டாய் எழுதினுர்.

உலகப் புகழ்பெற்ற மாமேதை டால்ஸ்டாய் ஜார் ஆட்சியின் கொள்கைகளை ஒளிவு மறைவின்றி வன்மை

யாகக் கண்டித்தார். இதைக் கண்டு ஜார் அரசாங்கம் சினம் கொண்டது. எனினும் உலகப் புகழ்பெற்ற பேரறிஞரை எதிர்த்து நேரடியான நடவடிக்கைகளை எடுக்கவும் அது துணிவின்றித் தவித்தது. ருஷ்யாவிலேயே மிகவும் உயர்ந்த மதத்திருச் சபை, 1901ஆம் ஆண்டில் ஞானியும் உண்மைக் கிறிஸ்துவருமான டால்ஸ்டாயை மத விலக்கம் செய்தது. மாதா கோயில்களில் அவர்மீது அல்லும் பகலும் நிந்தனையும் பழியும் சுமத்தப் பெற்றன. எனினும் டால்ஸ்டாயின் புகழும் செல்வாக்கும் மென்மேலும் பரவிற்று. 1908ஆம் ஆண்டில் மாபெரும் ருஷ்ய எழுத்தாளரின் எண்பதாம் பிறந்த நாளை உலகம் பூராவும் கொண்டாடியது.

உலகெங்குமிருந்த சகல ஒடுக்கப்பெற்ற மக்களின் நண்பர் அவர். அடிமை மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆர்வ அனுதாபத்துடன் கவனித்து வந்தார். இந்திய மக்கள்பால் அவர் கொண்டிருந்த நேச உணர்ச்சிகளையும், மகாத்மா காந்திக்கு அவர் எழுதிய கடிதங்களையும் அனைவரும் அறிவர். மகாத்மா காந்திக்கு எழுதிய கடிதங்களில் டால்ஸ்டாய் இந்தியாவில் அன்னிய ஆட்சியாளர்களின் கொள்கைகளையும், தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் ஒடுக்கப்பெற்றதையும், இன வெறியையும் கண்டித்தார்.

டால்ஸ்டாய் வாழ்க்கையின் இறுதி ஆண்டுகள் நிம்மதியற்றுத் துயரம் தோய்ந்து விளங்கின. போக போக்கியங்களைக் கைவிட்டு எளிய வாழ்க்கையை நடத்த வேண்டுமெனப் போதித்து வந்தபோதிலும், செல்வச் சிறப்புடன் வாழ்ந்த தமது குடும்பத்துடனேயே இருக்கும்படி அவர் நிர்ப்பந்திக்கப் பெற்றார். தம் வீட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டுமெனப் பன்முறை அவர் திட்டமிட்ட

துண்டு. அங்கிருந்த சமூகச் சூழ்நிலையும், அநீதியும் அவர் உள்ளத்தை வாள் கொண்டு அறுத்தன. தார்மீகப் பண்பாடுகளைப் போதிப்பதன் மூலம் மட்டும் இந்தத் தீமைகளை அகற்ற முடியாது என்பதை உணரலானார். இறுதியில் 1910 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில், தமது எண்பத்து இரண்டாம் வயதில், யாருக்கும் தெரியாமல் யாஸ்னயா போல்யானவை விட்டு வெளியேறினார். ஆனால் வழியில் அவருக்கு நிமோனியா ஜுரம் கண்டு, ஒரு ரயில் நிலையத்தில் காலமானார். டால்ஸ்டாயின் மரணம் கேட்டு உலகம் முழுதுமே திடுக்குற்றது. சகல நாடுகளிலுமிருந்த பண்பாளர்கள் கண்ணீர் உகுத்தனர்.

லியோ டால்ஸ்டாயின் சடலம் யாஸ்னயா போல்யானவில் புதைக்கப்பெற்றது.

ருஷ்யா ஞானி டால்ஸ்டாயின் நினைவை ருஷ்ய மக்கள் பூஜிக்கின்றனர். ருஷ்யாவில் அவருடைய நூல்கள் லட்சக் கணக்கான பிரதிகள் வெளியிடப் பெறுகின்றன. மனித குல 'முழுவதுமே அவருடைய நூல்களில் மிக்க ஈடுபாடு கொண்டிருக்கிறது.

# ஜெர்மனியின் உதாரணம்

## சசிகலா திரிவேதி

சுயேச்சைத் தொழில் முயற்சியும், நல்வாழ்வரசும் ஒன்றுக்கொன்று முரணானவை என்பதாக பொதுவாக ஒரு கருத்து இருந்து வருகிறது. பாரத நாட்டிலும், சோஷலிஸ சமுதாய முறைமையை நமது லட்சியமாக நாம் ஏற்றுக் கொண்டபின், இந்தக் கருத்து பரவிக் கொண்டிருக்கிறது. நல்வாழ்வரசு, ஒன்றை உருவாக்க வேண்டுமானல், சுயேச்சைத் தொழில் முயற்சியை மேலும் மேலும் அதிகமாகத் தடுக்க வேண்டும் என்ற கருத்து வன்மையாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனல் அரசாங்க முதலாளித்துவ முறை மூலம்தான் நல்வாழ்வரசு ஒன்றைச் சாதிக்க முடியும் என்று கட்டாயமா? ஒருபோதுமில்லை. மேற்கு ஜெர்மனியின் வியக்கத்தக்க உதராணமே இதற்குச் சான்று.

மேற்கு ஜெர்மன் அரசாங்கத்தின் தொழிலாளர் நல மந்திரி திபோடோர் ப்ளாங்க் சொல்லுவது போல, "இனிமேல் (மேற்கு ஜெர்மன்) அரசாங்கம் ஒரு நர்ஸ் போல தனி மனிதர் ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை." இருந்த போதிலும் ஜெர்மனியின் சமூகச் சட்டத்தில் சுகாதார இன்ஷ்யூரன்ஸ், விபத்து இன்ஷ்யூரன்ஸ், முதிய வயது இன்ஷ்யூரன்ஸ், இயலாமை இன்ஷ்யூரன்ஸ் ஆகிய நன்மைகளுக்கும், இவை பொன்ற வேறு பல நன்மைகளுக்கும் வகை செய்யப்பெற்றிருக்கிறது. சமூக இன்ஷ்யூரன்ஸ் தனித்

தனிப் பிரிவுகளெல்லாம் அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இருக்கின்றன. இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களில் எல்லோரும் சேர்ந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இருக் கிறது.

சமூக இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாட்டில் மிக முக்கிய மான அம்சம், இயலாமை-முதிய வயது இன்ஷ்யூரன்ஸ் தான். எல்லாத் தொழிலாளரும், எல்லா நுட்ப் பயிற்சி யாளரும் இந்த இன்ஷ்யூரன்ஸில் கட்டாயமாய்ச் சேர்ந்தாக வேண்டும். இந்த இன்ஷ்யூரன்ஸுக்குச் சிப்பந்திகள் ஒரு பகுதியும், முதலாளிகள் ஒரு பகுதியும் பணம் போடுகிறார் கள். ஊதியத்தில் 14 சதவிகிதம் வரை இந்த விகிதத்தில் இன்ஷ்யூரன்ஸுக்குச் செலுத்தப் பெறுகிறது. நாட்டின் மக்களில் ஏழெட்டுப் பேருக்கு ஒருவர் வீதம் இயலாமைப் பென்ஷனோ, காரியாலயச் சிப்பந்திக் குரிய பென்ஷனோ பெற்று வருகிறார்கள்.

வேலை யின்மை இன்ஷ்யூரன்ஸ் என்பது சமூக இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாட்டின் ஒரு முக்கிய அம்ச மாகும். எல்லாத் தொழிலாளரும், எல்லாக் காரியாலயச் சிப்பந்திகளும் இந்த இன்ஷ்யூரன்ஸில் கட்டாயமாய்ச் சேர்ந்தாக வேண்டும். சம்பளத்தில் ஒரு சதவிகிதத் தொகையைச் சிப்பந்தி செலுத்த வேண்டும்; அதே தொகை ஒன்றை முதலாளியும் இந்த இன்ஷ்யூரன் ஸுக்குச் செலுத்துவார். வேலை யிழக்கும் ஒவ்வொரு வருக்கும், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு "வேலையின்மைக் காலச் சம்பளம்" என்பதாக ஒன்று கிடைத்துக் கொண்டி ருக்கும். சிலருடைய விஷயத்தில் குறைக் காலச் சம்பள மும் கொடுக்கப்படுகிறது. வேலை யில்லாமல் கஷ்டப்படு கிறவர்களில் இன்ஷ்யூர் செய்து கொள்ளாதவர்களாகவோ அல்லது நிரந்தரமாய் வேலை யிழந்ததால் திட்டத்தின்

பலனை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மேல் அனுபவிக்க முடியாதவர்களாகவோ இருந்தால், அவர்களுக்கு உதவி யளிப்பது அவசியம் என்று தெரியும் போது, வேலை யில்லாதவர் உதவி நிதியிலிருந்து அவர்களுக்குப் பண உதவி யளிக்கப்பெறும்.

சமூக இன்ஷ்யூரன்ஸின் நன்மைகள் ஒருபுற மிருக்க, போரின் விளைவாக ஏற்பட்ட "சமப் பொறுப்பு"ப் பணி களுக்கும் மேற்கு ஜெர்மனியில் பெரும் முக்கியத்துவம் இருக்கிறது. ஜெர்மன் சமுதாயம் முழுவதும் திரட்டிய பொது நிதியிலிருந்து, போர்க் கஷ்டங்களை அதாவது போரின் விளைவான துன்பங்களை-இயன்றளவு துடைப் பது இதன் நோக்கம். போர்க் கஷ்ட முற்றோர் உதவி ஸ்தாபனமும், சமப் பொறுப்புத் திட்டமும் சேர்ந்து இந்த நோக்கத்தை ஒரு சாதனை யாக்கி விட்டன.

அகதிகளுக்கும், அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் இந்த சமப் பொறுப்புத் திட்டத்தின் மூலம் ஈடு தொகை அளிக்கப்பெறுகிறது. இந்தத் திட்டத்துக்கென சொத் துக்களின் மேல் வரி விதித்துப் பணம் திரட்டுகிறார்கள். போரில் தப்பிப் பிழைத்த சொத்துக்களுக்கு, செலாவணிச் சீர்திருத்த தினமான 1948 ஜுன் 21-ஆம் தேதி யன்று என்ன மதிப்பு இருந்ததோ அதில் பாதிப் பணத்தை இந்த மாதிரி சொத்து வரியாகச் செலுத்த வேண்டும். இந்த வரித் தொகையைத் தவணை தவணையாக 1979-ஆம் ஆண்டுக்குள் செலுத்தி விட வேண்டும். சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே இந்த வரியைச் செலுத்த வேண்டும் என்பது விதி. கடைசியாகக் கிடைத்துள்ள புள்ளிவிவரங்களின்படி, 2,900 கோடி ரூபாய்க்கும் மேல் இதுவரை செலுத்தப்பெற்றிப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் நலப் பணி ஸ்தாபனங்கள் செய்யும் முயற்சிகளோடு தனியார் சேவா ஸ்தாபனங்களின் முயற்சியும் சேருகிறது. இந்தத் தனியார் ஸ்தாபனங்களுக்கு பத்து லட்சம் பேருக்கு மேல் நன்கொடை கொடுக்கிறார்கள். இந்த உதவி கொண்டு, அவை, கணக்கற்ற மக்களின் துன்பத்தையும், தாபத்தையும் துடைக்கின்றன. பொருளாதாரத் துறையிலும், ஆத்மிகத் துறையிலும் இந்த ஸ்தாபனங்கள் ஒருங்கே பணி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மனிதன் முதலில் எங்கு தோன்றினுன்

கொலம்பஸ் அமெரிக்கா போய்ச் சேர்ந்தபோது, அங்கு ஏற்கெனவே மக்கள் இருக்கக் கண்டார். அன்று முதல் ஒரு கேள்வி? எவ்வாறு அம்மக்கள் அமெரிக்கா போய்ச் சேர்ந்தார்கள் என்பதே அக் கேள்வி.

பழஞ் சின்னங்களின் காலத்தை நிர்ணயிக்கும் தற்கால விஞ்ஞான முறைகளேப் பயன்படுத்தியும், அண்மையில் ஆப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப் பெற்ற தொல் பொருள்களே ஆராய்ந்தும் மனிதன் அமெரிக்காவுக்கு எவ்வாறு வந்து சேர்ந்தான் என்பதற்கு டாக்டர் ஜார்ஜ் கார்ட்டர் என்னும் விஞ்ஞானி ஒரு விடை கண்டுள்ளார்

டாக்டர் கார்ட்டர், ஜான்ஸ் ஹாப்சின்ஸ் பல்கலேக் கழகத்தைச் சேர்ந்தவர். மக்கள் இனத்தின் தொன்மை பற்றி ஆராய்வதற்கு அவர் தரைநூல் நுட்பங்களேப் பயன்படுத்துகிருர். இத்துறையில் வல்லாரென்று நாடு முழுவதும் புகழ் பெற்றுள்ளார். அவர் கருத்து:—

கீன்யாவிலும் கிழக்கு மத்திய ஆப்பிரிக்காவிலும் மனித எலும்புகள் அண்மையில் கண்டு பிடிக்கப்பெற்றுள்ளன. அவற்றின் காலம் சுமார் ஏழு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவாவது, அல்லது ஒரு லட்சம் ஆண்டுகள் அதிகமாகவாவது குறைவாகவாவது இருத்தல் வேண்டும்.

இக்காலத்தில் கண்டு பிடிக்கப்பெற்றுள்ள மிகத் தொன்மையான மனிதன் கீன்யா மனிதனே. அவன் மிகச்

சிறிய உருவம் உள்ளவன்; குள்ளமானவன்; பண்படாத கற்கருவிகளைப் பயன்படுத்தத் தெரிந்தவன்.

எதிர் காலத்தில் வேறு ஓர் இடத்தில் மனிதன் தோன்றியிருக்கக் கூடும் என்று யாரேனும் கண்டு பிடிக்கலாம்; எனினும், இப்பொழுது உள்ள ஆராய்ச்சி யின்படி மனிதன் முதல் முதல் கென்யாவில்தான் தோன்றியிருக்க வேண்டும். அவ்வாருயின், அங்கிருந்து அவன் எவ்வாறு வெளியேறினன்?

சிறிய உருவமாக இருந்த பழங்காலத்து மனிதன் ஆப்பிரிக்காவின் தென் கோடியில் எங்கும் அலைந்து திரிந் தான். அவ்வாறு எங்கும் செல்ல அவனுல் முடிந்தது. அவன் வசதியாக உயிர்வாழ்வதற்கு அங்குள்ள சீதோஷ்ண நிலை துணை செய்ததே அதற்குக் காரணம். எனினும், கடலைக் கண்டதும் அவன் அங்கு நின்று விட்டான். எந்த விதமான படகும் அவனுக்கு இல்லை. அதனுல் அவன் அங்கு தங்கிவிட நேர்ந்தது.

வடக்கே ஆப்பிரிக்கப் பாலைவனம் அவனைத் தடுத்து நிறுத்தியது. இன்றும் தற்காலச் சாதனங்கள் இன்றி அதனைக் கடத்தல் அரிது. அதனைக் கடந்தாலும், அதற்கு அப்பால் மத்திய தரைக் கடல் உள்ளது; அது மற்ருெரு தடை.

ஆயினும், ஆறு அல்லது ஏழு லட்சம் ஆண்டுகளுக்கு முன் கென்யாவுக்குப் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அது குள்ள மனிதன் இடம் பெயர்ந்து செல்வதற்குத் துணை செய்தது. அது பனி யுகத் தோற்றம். அந்த யுகத்தில் ஒன்றன்பின் ஒன்ருய்ப் பல மாறுதல்கள் நிகழ்ந்து பூமியை எக்காலத்திலும் இல்லாத முறையில் மாற்றின.

5.000 அடி திண்ணமுள்ள பனிப்படலங்கள் கோடிக் கணக்கான சதுரமைல் பரப்பை மூடியிருந்த காலம் அது.

இப்பொழுது அவ்வளவு பனிக் குவியல் ஏற்படுவதற்கு எவ்வளவோ பனி வேண்டும். பனி தண்ணீரிலிருந்து ஏற்பட்டது. தண்ணீர் கடல்களில் உள்ளதேயாகும்.

எனவே, கடல்களின் நீர் மட்டம் குறைந்தது. இன்றைய கடல் மட்டத்துக்கு அது, 300 அடி குறைந்திருக்கலாம். இது உலகத்தின் தரைப் படத்தை மிகவும் மாற்றி விட்டது.

இங்கிலாந்து ஐரோப்பாக் கண்டத்தின் ஒரு பகுதி ஆயிற்று. பிளாரிடா இன்று உள்ளதற்கு இருமடங்கு பெரிதாக இருந்தது. தென்கிழக்கு ஆசியாவிலுள்ள தீவுகள் ஆசியாக் கண்டத்தோடு சேர்ந்திருந்தன. ஆஸ்திரேலியாக் கண்டத்துக்கு மனிதன் நடந்து செல்லலாம். பேரிங் கடல் மறைந்தது. சைபீரியாவும் அலாஸ்காவும் ஒன்ருய் இருந்தன.

நெடுங்காலம் நிலவிய பனி யுகம் ஆப்பிரிக்காவின் தட்ப வெப்ப நிலைகளையும் மாற்றியது. அதனுல் பாலை வனங்கள் வளம் பொருந்திய சம வெளிகளாக மாறின. கீன்யா மனிதன் எளிதில் நடந்தே அவற்றைக் கடக்க முடிந்தது.

கீன்யாவில் வாழ்ந்த குள்ள மனிதர் வடக்கு நோக்கி நடந்து சென்றனர். அவர்கள் அரேபியாவுக்கு வந்து அங்கு அலைந்து திரிந்தார்கள். அங்கிருந்து அவர்கள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள். இவையெல்லாம்

திடீரென்று நடந்துவிடவில்லை. இந் நிகழ்ச்சிகள் நடப்பதற்கு ஒரு லட்சம் ஆண்டுகள் ஆகியிருத்தல் வேண்டும்.

பனியாறுகள் பாய்வதும் மாய்வதுமாக இருந்ததால், கென்யா மக்கள் பல்வேறு நாடுகளில் பல்வகை மக்களாக உருவாயினர். சீனவிலுள்ள பீக்கிங்கில் ஒரு பண்பாடு நிலவியது. சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு மற்றொரு பனியாறு ஓடியது. மீண்டும் கடல் மட்டம் தாழ்ந்தது. சைபீரியாவுக்கும் அலாஸ்காவுக்கும் இடையில் மீண்டும் தரை தோன்றியது; இரண்டும் ஒன்ருயின. பீக்கிங்கிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் ருஷ்யாவுக்கு நடந்து சென்ற மக்கள் அலைந்து திரிந்த சைபீரியா வழியே அலாஸ்கா சேர்ந்து, அங்கிருந்து கானடாவும் அமெரிக்காவும் போய்ச் சேர்ந்தார்கள். பதினையிரம், முப்பதினையிரம் ஆண்டுகளாக சைபீரியாவையும் அலாஸ்காவையும் தரை இணைத்திருந்தது. ஆதலால். பல்லாயிரம் ஆண்டுகளாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்வாறு, மனிதன் வட துருவத்தின் வழியாக அமெரிக்கா வந்து சேர்ந்து விட்டான்.

# விசித்திரக் கண்காட்சி

நம் உலகில் இன்று விசித்திரமாகத் தோன்றும் ஒரு விஷயம் நாளை உண்மையாக நடந்து விடுகிறது. மேற்கு ஜெர்மனியின் ஹேகன் பட்டணத்தில் நடைபெறும் விநோதக் கண்காட்சி ஒன்றைப் பார்க்கும் போது இந்த எண்ணம்தான் தோன்றும். விஞ்ஞானிகளும், மற்ற நிபுணர்களும் கண்டுபிடித்த பொருள்களைக் கொண்டு நடைபெறும் பதினைந்தாவது கண்காட்சி இது. பல தேசங்களின் மேதைகள் கண்டுபிடித்த 800 கவர்ச்சி மிக்க பொருள்கள் இதில் வைக்கப்பெற்றிருக்கின்றன. வெறும் உற்சாகத்தால் புதிது புதிதாய்க் கண்டு பிடிப்ப வர்கள், தொழில் ஆராய்ச்சியாளர், குட்டி நிபுணர்கள்— முதலிய எல்லாவகை நிபுணர்களின் திறமைக்கும் ஒரு வரம்பே இல்லை என்பது இந்தக் காட்சி மூலம் புலப் படும்.

உதாரணமாக, இந்தக் காட்சியில் பல நோக்கக் கருவி ஒன்று இருக்கிறது. அதைக் கொண்டு தபால் ஸ்டாம்புகளுக்கும், கவர்களுக்கும், ஈரம் தடவலாம்; கவர்களின் மேல் ஸ்டாம்பு ஒட்டவும் செய்யலாம்; விரும்பினால் பென்சில் சீவக்கூடச் செய்யலாம். இன்னொரு கருவி; யூகோஸ்லோவியா தேசத்து வ்ளாடிமிர் என்பவர் கண்டு பிடித்தது. இந்தக் கருவியைக் கொண்டு, சலவை வர்ணங்களின் உப்புக்களைக் கண்டு பிடித்து விட முடியும். சில எண்களையும், அளவு கருவி களையும் ஒரு குறிப்பிட்ட நிலையில் வைத்து விட்டு, ஒரு சில பித்தான்களையும், ஸ்விச்சுகளையும் அமுத்தி, தகடுகள்

சிலவற்றைச் சுற்றிவிட்டால், எந்தச் சிக்கலான கலவை வர்ணத்திலும் மூல வர்ணங்கள் யாவை என்பதை அந்தக் கருவி காட்டிவிடும். அந்தக் கருவியில் உலக நேரம் காட்டும் கடிகாரம் ஒன்றும் இணைக்கப்பெற்றிருக்கிறது. ஆகாய நீலத்தில் வெள்ளையும், நீலமும் கலந்திருக்கின்றன என்பதைக் காட்டும் கருவி, கூடவே, அமெரிக்காவின் லாங்பீச் மாதிரி ஓர் இடத்தில் அந்தச் சமயத்தில் என்ன நேரம் என்பதையும் காட்டிவிடும். இப்படி ஒரு விசித்திரக் கருவி.

பான் நகரத்துத் தொழிலதிபர் ஒருவர் கண்டுபிடித்துள்ள எச்சரிக்கை அடையாளம் ஒன்று காட்சியில் இடம் பெற்றிருக்கிறது. காற்றடைக்கக் கூடிய கருவி இது. மோட்டார் வண்டி ஓட்டிக் கொண்டு போகும் போது வழியில் விபத்து வந்தாலும் சரி, டயரில் ஓட்டை ஏற்பட்டு விட்டாலும் சரி, இந்த அடையாளத்தை நிறுத்தி வைத்துக் காற்றடைத்து விட வேண்டும்; இதற்குள்ளேயே சிறிய பாட்டரி விளக்கு ஒன்று இருக்கிறது. அது உடனே எரிந்து எச்சரிக்கை கொடுக்கும். கருவிகள் கண்டுபிடிப்பதை ஒரு பொழுது போக்காகக் கொண்டிருக்கும் ஒருவர் இந்த அடையாளத்தை அமைத்து வெற்றி கண்டிருக்கிறார். அவர் இந்தக் கருவியின் லைஸென்ஸ் உரிமையை பிரான்ஸுக்கு லட்ச ரூபாய்க்கு விற்றுவிட்டார்.

"உலகத்திலேயே மிகச் சிறிய ரேடியோ" என்பதாக ஒன்றும் இந்தக் காட்சியில் இடம் பெற்று எல்லோருக்கும் ஒரு பரபரப்பைக் கொடுத்து விட்டது. இதன் எடை 30 கிராம்தான்; விலையோ அறுபது ரூபாய்தான். ப்ராங்க்பர்ட் நகரத்தில் பெண்களுக்குச் சிகை அலங்காரம் செய்பவர் ஒருவர் இதைக் கண்டுபிடித்திருக்கிறார்.

அவருடைய வாடிக்கைக்காரர்களெல்லாம் இதை கிளிப் மாதிரிக் காதில் மாட்டிக் கொண்டு வானொலி நிகழ்ச்சிகளை ரசிக்கிறார்கள்.

இன்னொரு 'ஏறு கருவி" இருக்கிறது; இதை வைத்துக் கொண்டு சுவர்களிலும், கப்பல் கம்பிகளிலும் ஏறி விடலாம். குறட்டையைத் தடுக்கும் கருவி ஒன்றுகூட இருக்கிறது; மூதிய வயதில் குறட்டை விடாமல் அமைதியாய்த் தூங்குவதற்கு இந்தக் கருவி உதவியாயிருக்கும். இன்னும் என்ன வெல்லாமோ கருவிகள்: "கைகள் துண்டிக்கப்பட்டவர்களுக் கென விசேஷ பல் பிரஷ்", "தண்ணீரைத் துடைப்பதற்கான தானியங்கியுடன் கூடிய பாது காப்புக் கண்ணாடிகள்", "செர்ரி பழம் பறிக்கும் கருவி" —இவ்வாறு பல கருவிகளுக்கு இந்தக் கண்காட்சியில் ஏகப்பட்ட கிராக்கி. விசித்திர, விநோத, விபரீதக் கருவிகள் ஒரு புறமிருக்க, இந்தக் காட்சியின் மற்ற எத்தனையோ கருவிகள் நம் வாழ்க்கையை அதிக சௌகரியமாக்கக் கூடியவை. பொழுது போக்குக்காகக் கருவிகள் கண்டுபிடிக்கும் மேதைகளின் திறமையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

# பென்சில் தோன்றிய கதை

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு 1550ஆம் ஆண்டில் ஓர் நாள் இரவு, வட மேற்கு இங்கிலாந்திலுள்ள கம்பர்லாந்து மலைப் பிரதேசத்தில் கடுமையான புயல் வீசிற்று. மரங்கள் வேர் சாய்ந்து வீழ்ந்தன. மறுநாள் அந்தப் பகுதிக்கு ஆடுகளை மேய்க்க வந்த இடையர்கள், சாய்ந்த மரங்களின் வேர்களுக்கிடையே கருப்பு மண்கட்டிகள் இருப்பதைப் பார்த்தார்கள். அதை நிலக்கரி என்று கருதி, வீட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். ஆனால் அது எரியவில்லை. அடுப்பிலிருந்து தூக்கி எறிந்தபோது கைகளில் கரிபட்டதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அந்தக் கட்டியை தரையில் கிழித்தபோது கருங்கோடு வீழ்ந்தது. ஆகவே அதை கம்பளரோமச் சிப்பங்களில் குறியிடவும், பெயர்களை எழுதவும் உபயோகிக்கலானார்கள். நாளாவட்டத்தில் அதனுடைய உபயோகம் அதிகரித்தது. இடையர்கள் கம்பர்லாந்து மலைப் பகுதிக்குச் சென்று தங்களுக்குத் தேவையான அளவுக்கு கருப்பு மண் கட்டிகளை எடுத்து வரலானார்கள்; இடையர்களைத் தவிர வேறு எவரும் அந்தப் பொருள் மீது அக்கறை காட்டவில்லை.

கம்பர்லாந்து கரிப் பொருளைப்பற்றி அரசாங்கத்தாருக்கும் செய்தி எட்டியது. அது என்னவென்று தெரியாவிட்டாலும் மதிப்புள்ள பொருளாக இருக்கக்கூடும் என்று அரசாங்கத்தார் கருதினார்கள். அதிகாரிகளை அனுப்பி எடுத்து வரச் சொன்னார்கள். கம்பர்லார்ந்து கரிக்கட்டி

களை ராணுவ வண்டியில் லண்டனுக்கு எடுத்துச் சென்றார்கள். பரிசோதனையில் அது கிராபைட் என்று தெரிந்தது.

அந்தக் காலத்தில் பீரங்கிக் குண்டுகளைச் செய்ய கிராபைட்டை உயோகித்து வந்தார்கள். அதனால் கம்பர்லாந்தில் கிராபைட் கிடைக்கும் பகுதியை அரசாங்கத்தார் வசப்படுத்திக் கொண்டார்கள். முதலாவது எலிசபெத் ராணி காலத்தில் கம்பர்லாந்து கிராபைட்டின் புகழ் வெளி நாடுகளிலும் பரவிற்று. ஓவியர்கள் கம்பர்லாந்து கிராபைட்டை விரும்பி வாங்கினார்கள். சிறந்த கருப்பு-வர்ணச் சித்திரங்களை வரைவதற்கு கம்பர்லாந்து கிராபைட்டையே உபயோகித்தார்கள். அந்தக் காலத்தில் இப்போதுள்ளது போல பென்சில்கள் இல்லை. ஓவியர்கள் கிராபைட் கட்டிகளை ஆட்டுத்தோலில் பொதிந்து எழுதுகோலாக உபயோகித்து வந்தார்கள்.

கிராபைட் எழுதுகோல் பொதுமக்களையும் கவர்ந்தது. நாளாவட்டத்தில் அதன் உபயோகம் பெருகவே வியாபாரிகள் கைக்கு அடக்கமான கவர்ச்சிகரமான எழுதுகோல்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தலானார்கள். கிராபைட்டை அரைத்து மெல்லிய கப்பிகளாக்கி மரச் சட்டத்தில் வைத்து 'பென்சில்களை' தயாரித்தார்கள். கம்பர்லாந்து கிராபைட் படிவங்களுக்கு அருகிலுள்ள கெஸ்விக் நகரத்தில்தான் 'பென்சில்' தொழில் தோன்றிற்று. கெஸ்விக் மக்கள் ஓய்வு நேரத்தில் பென்சில்களைத் தயாரித்து விற்பனை செய்தார்கள். இன்றும் கம்பர்லாந்து பகுதியில் பென்சில்களைத் தயாரிக்கிறார்கள். விஞ்ஞான-தொழில்நுட்ப வளர்ச்சியால்

பென்சில் உற்பத்தியிலும் பல முன்னேற்றங்கள் ஏற் பட்டன. இப்போது கம்பர்லாந்தில் கருப்புப் பென்சில் களைத் தவிர 72 வர்ணங்களில் பென்சில்களைத் தயாரிக்கிறார்கள்.

இலங்கை, மெக்ஸிகோ, கொரியா முதலிய நாடு களிலும் கிராபைட் கிடைக்கிறது. இங்கிலாந்தைத் தவிர வேறுபல நாடுகளிலும் பென்சில் தொழிற்சாலைகள் உண்டு. அதனால் கம்பர்லாந்து பென்சில்களுடைய புகழ் மங்கிவிடவில்லை, வேறு பல நாடுகளிலும் வர்ணப் பென் சில்களை தயாரிக்கிறார்கள். சிறுவர்களில் சிலருக்கு பென் சிலை நக்கி எழுதும் பழக்கமுண்டு. இது தீய பழக்கம். வெளிநாடுகளில் தயாரிக்கப்பெறும் வர்ணப் பென்சில் களில் நச்சுப்பொருள்கள் கலந்திருப்பதால், நக்கி எழுதும்போது, நஞ்சு உடலில் செல்லக்கூடும். ஆனால் கெஸ்விக் நகரில் தயாரிக்கப்பெறும் வர்ணப் பென்சில் தீங்கற்றவை. அவற்றில் நச்சுப் பொருள்கள் ஏதும் கலக்கப் பெறவில்லை. அதனால் தன்னை மறந்த நிலையில் ஒரு சிறுவன் பென்சிலைச் சுவைத்தாலும் தீங்கு நேராது.

# விட்லி கௌன்சில்கள்

அரசாங்கத்திற்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் இடையே ஏற்படும் தகராறுகளைச் சமரசமாகத் தீர்த்து வைக்க பிரிட்டனிலுள்ள விட்லி கௌன்சில்களைப் போன்ற ஆலோசனைக் குழுக்களை நியமிப்பதுபற்றி சிந்திப்பதாக அண்மையில் இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவித்தனர்.

பிரிட்டனில், காமன்ஸ் சபையின்சபாநாயகர் திரு. ஜே. எச். விட்லியின் பெயரால் நிறுவப்பெற்ற விட்லி கௌன்சில்கள், அரசாங்கம்-அரசாங்க ஊழியர்கள் கூட்டுறவை வளர்க்கச் சிறப்பாக உதவியிருக்கின்றன. அரசாங்க ஊழியர்களுடைய நலனைக் காப்பதும் நிர்வாகத் திறமையைப் பெருக்குவதுமே இந்தக் குழுக்களின் முக்கிய நோக்கமாகும்.

சிவில் சர்வீஸ் நேஷனல் விட்லி கௌன்சில் என்ற தேசீய ஆலோசனைக் குழு 1919 அம் ஆண்டில் அமைக்கப் பெற்றது. அதன் பிறகு, அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிலும் விட்லி கௌன்சில்கள் நிறுவப்பெற்று 1917-18ஆம் ஆண்டில் விட்லியின் தலைமையில் பணியாற்றிய குழு, நிர்வாக யந்திரத்தைப் பரிசீலனை செய்து, சில சிபாரிசுகளைச் செய்தது. அந்தச் சிபாரிசுகளை நிறைவேற்ற விட்லி கௌன்சில் அமைக்கப்பெற்றது. தொழில்துறையில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைக்க சமரச மன்றங்கள் இருப்பது போல நிர்வாகத் துறைக்கும் நடுவர் குழு இருப்பது நலம் என்று கருதினர்.

விட்லி கௌன்சில்களில் அரசாங்கப் பிரதிநிதிகளும் அரசாங்க ஊழியர்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கிறார்கள். தேசீய கௌன்சிலில் நான்கு செயலாளர்கள் உட்பட - 54 உறுப்பினர்கள் உண்டு. இவர்களில் ஏறக்குறைய பாதிப்பேர் அரசாங்கத்தின் பிரதிநிதிகளான பிரதான அதிகாரிகள். நிதி அமைச்சகத்தின் பிரதிநிதியாக குறைந்தபட்சம் ஒருவரும் தொழில்துறை அமைச்சகத்தின் பிரதிநிதியாக ஒருவரும் அரசாங்கத்தின் சார்பில் இடம் பெறுவார்கள். மற்றப் பாதிப்பேர் நிர்வாகத்துறை ஊழியர் சங்கங்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள். ஏதாவது ஒரு குறிப்பிட்ட துறையில் தகராறு ஏற்பட்டால் அதைப்பற்றி ஆலோசிக்க அந்தத் துறையைச் சேர்ந்த கௌன்சில் உறுப்பினர்கள் சந்திப்பார்கள். பொதுவான பிரச்னையாக இருந்தால், தேசீய கௌன்சில் கூட்டத்தில் அதைப்பற்றி ஆராயப்பெறும். எந்தத் தகராறையும் சமரசப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையே விட்லி கௌன்சில் அமைப்புக்கு ஆதாரம்; சமரசம் காணவேண்டும் என்பதே அதன் நோக்கம். விட்லி கௌன்சில் கூட்டங்களில் வாக்கெடுப்பு மூலம் முடிவுகளைச் செய்வதில்லை. ஒரு சிறுபான்மையோர் எதிர்ப்புக் குரல் காட்டினுல்கூட எல்லோரும் ஏற்கும் முறையில் ஓர் உடன்பாடு ஏற்படும் வரையில் தொடர்ந்து விவாதிக்கப் பெறும். பொதுவாக இந்த முயற்சி வெற்றிபெறுவதே வழக்கம்.

உரிமை அல்லது ஊதியம்கோரி எழும் தகராறுகளில் சமரசமான உடன்பாடு காணத் தவறும்போது, தேசீய விட்லி கௌன்சில் ஒப்பந்தத்தின் வரம்புக்குட்பட்டு, மத்தியஸ்தத்திற்கு விட்டு விடலாம். இம்மாதிரித் தகராறுகளை சிவில் சர்வீஸ் ஆர்பிட்ரேஷன் டிரிப்யூனல் என்ற நடுவர் குழு விசாரித்து மத்

யஸ்த தீர்ப்பு அளிக்கிறது. இந்த நடுவர் குழுவில் சுதந்திர மாகச் செயலாற்றும் உரிமையுள்ள தலைவரும், அரசாங்கப் பிரதிநிதிஒருவரும் ஊழியர்கள் பிரதிநிதிஒருவரும் அங்கம் வகிக்கிருர்கள். அரசாங்க உறுப்பினரைத் தொழிலாளர். நலத்துறை அமைச்சர் (நிதி அமைச்சகப் பிரதிநிதியாகப் பணியாற்ற) நியமிப்பார். ஊழியர்கள் சார்பில் நியமிக்கப் பெறும் உறுப்பினரைத் தேசிய விட்லி கௌன்சிலிலுள்ள ஊழியர்கள் பிரதிநிதிகள் நியமிப்பார்கள்.

எந்த மாதிரி பகைப் புலனில் விட்லி கௌன்சில் தோன்றி வளர்ந்தது என்பதைக் கவனித்தால்தான் அதன் வெற்றியை மதிப்பிடமுடியும். பிரிட்டிஷ் சிவில் ஊழியர் சங்கங்கள், உறுப்பினர் எண்ணிக்கையாலும் பேரம்பேசும் திறமையாலும் பலம் பெற்றவை. அவை, வெற்றி பெற வேலை நிறுத்தத்தைக் கையாளாமல், பொறுமையாகவும் சாதுர்யமாகவும் வாதாடுகின்றன. 'சொஸைடி ஆவ் சர் வண்ட்ஸ்' என்ற சங்கம் நிர்வாக அதிகாரிகளுடைய நல னைக் காக்கிறது. 'இன்ஸ்டிட்யூஷன் ஆவ் புரோபெஷனல் சிவில் சர்வன்ட்ஸ்' என்ற சங்கம், அரசாங்கஊழியம் செய் யும் வக்கீல்கள், டாக்டர்கள், விஞ்ஞானிகள் முதலியவர் களுடைய நலன்களைக் காப்பதில் அக்கறை காட்டுகிறது. குமஸ்தாக்களின் உரிமைகளைக் காக்க 'சிவில் சர்வீஸ் கிளெரிகல் அஸோஸியேஷன்' உழைக்கிறது.

கும்ஸ்தாக்களும் அதிகாரிகளும் அரசாங்க ஊழியர் கள்தான். அதனல், அவர்களிடையே தொழில்துறையிலி ருப்பதுபோல முதலாளி - தொழிலாளி உறவுக்கு இட மில்லை. ஆகவே ஒரு குறிப்பிட்ட துறையில் பணியாற்று கிறவர்கள், தங்களுடைய குறைகளை எடுத்துக்கூற யாரை அணுகுவது என்ற பிரச்னை தொடக்க நாட்களில் இருந்தது. தெரியாமலோ ஊதியம் வழங்கும் துறையான

நிதி அமைச்சகத்திடம் முறையிட்டுக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. இம்மாதிரிச் சிக்கல்களைத் தீர்க்கவே விட்லி கௌன்சில்களை அமைக்கச் சிபாரிசு செய்யப் பெற்றது. அரசாங்கம், விட்லி சமரச முறையை இயன்ற அளவுக்கு உபயோகிக்கச் சம்மதம் தெரிவித்தது. மக்களுடைய நலனைக் காக்கும் பிரதான கடமை இருப்பதால், அரசாங்கம் அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு ஊறு நேராத வகையில் அரசாங்க ஊழியர்களுடைய நலனைக் காக்க இசைவு தெரிவித்தது. அரசாங்க ஊழியர்களுடைய குறைகளைத் தீர்க்க; அரசாங்க ஊழியர்களுடைய பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிகளும் கூடிப்பேசுவதே சிறந்த மார்க்கம் என்பது ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

அரசாங்க ஊழியர்களுடைய நலன்களைக் காப்பது. சங்கங்களுடைய பொறுப்பு. விட்லி அமைப்பு முறை, அவற்றின் பணியில் குறுக்கிடவில்லை. துணை செய்கிறது. விட்லி கௌன்சில்கள் திறமையுடன் செயலாற்றுகின்றன. அவற்றால் நன்மைகள் ஏற்பட்டுள.

தேசீயக் கௌன்சில் பொதுவான பிரச்னைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. துறைச் சங்கங்களோ பயிற்சி திட்டங்கள், ஊதிய உயர்வு முறையில் கூட்டுறவு ஊழியர்கள் நலன் எனப் பல துறைகளில் கவனம் செலுத்தி வெற்றிகரமாகப் பணியாற்றுகின்றன.

# ஆழ்கடலுக்கு அடியில்

நீலத் திரைக் கடலுக்கு அடியிலே மறைந்து கிடக்கும் மர்ம உலகம் மனிதன் இதுவரை காணாத புதுமையும் சிறப்பும் மிக்க உலகமாக இருக்கக்கூடும்.

உலகத்திலேயே மிக்க உயரமான மலை இமய மலை; அதைவிட உயரமான மலை ஒன்று ஆழ்கடலுக்கு அடியில் இருக்கிறது. இது போல வானளாவும் - இல்லை; நீரளாவும் மலைகள் பல கடலுக்குள் இருக்கின்றன. அதே சமயம் படு பாதாளப் பள்ளங்களும் இருக்கின்றன. "கிராண்டு கான்யான்" என்றுவழங்கப்படும் அமெரிக்க மலைக்கணவாயைப் போன்ற ஏழு பள்ளங்களை விழுங்கக் கூடிய படுபாதாளம் அவற்றுள் ஒன்று; இதன் நீளம் 1200 மைல். மேலும் விரிந்த சமவெளிகளும், பரந்த மேட்டுத் தரைகளும், மாபெரும் மொட்டைக்குன்றுகளும், செங்குத்தாக நிற்கும் பயங்கரமான மலைவிளிம்புகளும் உள்ளன. அநேக இடங்களின் தரை மட்டம் திடீரென ஏழு, எட்டு மைல் இறங்கி விடுகிறது.

இவையெல்லாம் விஞ்ஞானிகளுக்கு ஏற்கெனவே தெரிந்த உண்மைகள். ஆயினும் அவர்களுக்குத் தெரியாதன இன்னும் எத்தனையோ இருக்கின்றன; அவற்றைப் பற்றி அவர்கள் ஆராய விரும்புகிறார்கள்.

### கடலுக்கு அடியில் கனி வளம்

கடலின் அடிமட்டத்தில் பல இடங்களில் இரும்பு, செம்பு, மாங்கனீஸ், கோபால்ட் முதலிய உலோகங்கள்

பெருவாரியாக உள்ளன. இவற்றை எடுத்துச் சிக்கனமான முறையில் விற்பனை செய்ய இயலுமானால், பெரும் பலன் விளையும். விஞ்ஞானிகள் கடல் தரையை ஆராய விரும்புவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

கடலாராய்ச்சியில் இவ்வாறு உலகம் முழுவதிலுமுள்ள விஞ்ஞானிகளுக்கு ஆர்வம் பெரிதும் வளர்ந்திருப்பதன் பயனாக, அமெரிக்கக் கடலோர நில உருஅளவை ஆராய்ச்சி நிலையம் தன் பணிகளைப் பெருக்கியுள்ளது.

இந்நிலையம் அமெரிக்க அரசாங்கத்தின் பணி நிலையமாகும். இது 1807 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தாமஸ் ஜெபர்ஸன் ஏற்படுத்தியது. அமெரிக்காவின் கடற்கரையை அளந்து குறிப்பிடுதல், கப்பல் போக்குவரத்துக்குக் கேடு விளைக்கக் கூடியவாறு கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள திட்டுக்களைக் கண்டுபிடித்துக்குறிப்பிடுதல், முதலிய பல வேலைகளை அது மேற்கொண்டது. இன்று கடலாராய்ச்சியில் தேவைப்படும் பல புதிய தகவல்களைக் கண்டுபிடிப்பதிலும் அது ஈடுபட்டுள்ளது.

நிலையத்துக்குத் தனிவகைப்பட்ட 15 கப்பல்கள் உள்ளன. இவை கடற்கரையை ஓட்டி வழக்கமாகச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யும்போது, வேறு பல முக்கிய விஞ்ஞானத் தகவல்களையும் கண்டுபிடிக்கின்றன. இன்று நெடுங்கடலில் சென்று ஆராயவும் இக்கப்பல்களில் சிலவற்றை நிலையம் அனுப்புகிறது.

பூமியின் மேற்பரப்பில் பத்துக்கு ஏழு பங்கு கடல்; எனினும் பல விஞ்ஞானிகள் கூறுவதே போல், நமக்கு அம்புலியின் மேற்பரப்பைப் பற்றி அதிகம் தெரியும். இந்தக் கடலைப் பற்றி அவ்வளவு விவரமாகத் தெரியாது.

கடலாராய்ச்சியை ஐந்து பெருந் துறைகளாகப் பிரிப்பார்கள்.

முதலாவது, பௌதிகக் கடலாராய்ச்சி; இது நீரோட்டம், வெப்ப நிலை, அழுத்தம் முதலிய கடலின் பௌதிகக் குணங்களை ஆராயும் துறை.

இரண்டாவது, கடல் உயிரியல்; இது கடலில் வாழும் தாவரங்களையும் விலங்கினங்களையும் பற்றி ஆராயும் துறை.

மூன்றாவது, இரசாயனக் கடலாராய்ச்சி; இது கடலில் உள்ள இரசாயனப் பொருள்கள் பற்றி ஆராயும் துறை.

நான்காவது, கடல் தரை உட்கூற்று இயல்: இது கடலின் அடிமட்டத்தைப் பற்றி ஆராயும் துறை,

ஐந்தாவது, கடல்வானியல்; இது, வாயு மண்டலத்துக்கும் கடலுக்கும் உள்ள தொடர்புகளை ஆராயும் துறை.

கடலின் நீரோட்டங்கள் பற்றி முக்கியமாக இன்னும் எவ்வளவோ அறிய வேண்டும் என்கிறார்கள், விஞ்ஞானிகள்:

கடலின் மேல் மட்டத்தில் தண்ணீர் குளிர்ந்து அது வட துருவம், தென் துருவப் பகுதிகளை அடையும்போது கீழே தாழ்கிறது; பின்னர் குளிர்ந்த இத் தண்ணீர் படைபடையாகப் பூமத்திய ரேகையை நோக்கி நகர்கிறது; பூமத்திய ரேகையை அடைந்ததும் மேலே வந்து பழையபடி வடக்கு, தெற்கு முனைகளை நோக்கித் தொடங்குகிறது. எனினும் இவ்வாறு சென்றுவர இந்நீரோட்டத்துக்கு

எவ்வளவு காலமாகிறது என்பது இன்னும் தெரியவில்லை. சிலர் நூறாண்டு என்றும் மற்றும் சிலர் பத்தாயிரம் ஆண்டு என்றும் சொல்லுகிறார்கள்; ஒருவருக்கும் அதன் உண்மை தெரியவில்லை.

இவ்வாறு கடலின் நீர் எவ்வளவு காலத்துக்கு ஒரு முறை புரள்கிறது என்பது தெரிவது அவசியம்; அதை வைத்துக் கடலின் மீன் வளத்தை ஆராயலாம். கடலிலிருந்து எவ்வளவு உணவு கிடைக்கக்கூடும் என்பதை இத்தகவலைக் கொண்டு சிறந்த முறையில் கணிக்கலாம் என்று ஒரு நிபுணர் கூறுகிறார்.

இதுபோல், கடல்வாழ் உயிரினங்கள் பற்றியும் விஞ்ஞானிகள் இன்னும் எவ்வளவோ ஆராய்ந்தறிய வேண்டியுள்ளது.

கடல்தரையின் அமைப்புகளையும் இன்னும் எவ்வளவோ ஆராயவேண்டியிருக்கிறது. கடலுக்கடியில் உள்ள தரைமட்டத்தின் வடிவத்தையும் அதன் பாறை அமைப்பையும் மற்றும் இது போன்ற பல இயல்களையும் மிகுதியும் ஆராய்ந்து காணவேண்டும்.

# அமெரிக்கத் தேர்தல்

## பிரசார நெறி முறைகள்

வருகிற நவம்பர் மாதம் அமெரிக்காவில் நடைபெறும் தேர்தலையொட்டிய பிரசாரம் மும்மரமாய் நடைபெறுகிறது. ஜனாதிபதி, துணை ஜனாதிபதி பதவிகளுக்கான தேர்தல் முக்கியமானவை. அதுவுமல்லாமல், வேறு ஆயிரக்கணக்கான பதவிகளுக்கும் தேர்தல் நடக்கும். இந்த ஆண்டில் உள்ளூர், தாலுகா, மாநில ஆகியவற்றின் அதிகாரிகளும், 28 மாநிலங்களின் கவர்னர்களும், அமெரிக்க செனட்டின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினரும், அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பெறுவர்.

தேர்தல் பிரசாரம் இருவகைப்படும் ஒவ்வொரு கட்சியும் தன் உறுப்பினர் ஆதரவைப் பெறவும், அவர்கள் தேர்தலில் வாக்களிக்குமாறு செய்யவும் கட்சி உறுப்பினருக்கு ஊக்கமூட்டும். அது ஒரு வகைப் பிரசாரம். ஒவ்வொரு கட்சியும் செய்யும் மற்றொரு வகைப் பிரசாரமும் உண்டு. அதாவது, இன்னாருக்கு வாக்களிக்க வேண்டும், அல்லது இன்ன கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்யாத வாக்காளரின் ஆதரவைப் பெற முயற்சி செய்வது.

சென்ற சில பத்தாண்டுகளில், அரசியல் எதிரிகளைத் தாக்கும் முறை மாறியுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வழங்கப்பெற்ற கடு மொழிகளை இன்று கேட்க முடியாது. வர வரத் தேர்தல்

பேச்சு முறை மாறி வந்திருக்கிறது. ஓர் அபேட்சகரின் தனி வாழ்க்கையையாவது தோற்றத்தையாவது தாக்கிப் பேசும் முறை பெரும்பாலும் மறைந்துவிட்டது.

எதிர்ப்பு அதிகமாக இருந்தால், பிரசாரம் மும்மரமாக இருக்கும். அபேட்சகர் ஓயாமல் பிரயாணம் செய்து நூற்றுக்கணக்கான இடங்களில் தோன்றி, மிகப் பல இடங்களில் பேச வேண்டியதாகும். வானொலி நிலையங்களிலும், டெலிவிஷன் நிலையங்களிலும் அவர் தோன்றிப் பேசவேண்டி வரும்.

பொதுவாக ஜனாதிபதித் தேர்தலுக்கு நிற்போர் தாம் செல்லக்கூடிய மாநிலங்களுக்கெல்லாம் செல்கின்றனர். பிரசார ரயில் வண்டியிலாவது, விமானங் களிலாவது அவர்கள் பிராயணம் செய்கிறார்கள். பத்திரிகைகளின் பிரதிநிதிகளும், வானொலிப் பிரதிநிதிகளும், அரசியல் ஆலோசகர்களும், பிரசாரத் தொண்டர்களும் அபேட்சகரோடு செல்வார்கள்.

முற்காலத்தில் ஜனாதிபதிப் பதவி அபேட்சகர்கள் ரயில் வண்டியில் பிரயாணம் செய்வார்கள். மிகச் சிறிய ஊர்களிலும் வண்டி நிற்கும். ஊர்களிலும் நகர்களிலும் உள்ளவர்களை அவர்கள் கண்டு பேசுவார்கள்; சிறிது நேரம் ஒவ்வோர் இடத்திலும் உரை நிகழ்த்துவார்கள்.

நாளொன்றுக்கு இவ்வாறு அவர்கள் இருபது உரைகள் நிகழ்த்துவார்கள். பெரிய நகரத்தில் முக்கியமான பிரசாரப் பேச்சு நடைபெறும். ஊர்வலங்களில் அவர்கள் காரில் செல்வார்கள். ரயில் வண்டியிலும் விமானத்திலும் சென்று பாக்க முடியாத இடங்களைக் காரில்போய்ப்

பார்ப்பது வழக்கம். ரயிலில்போய் ஒவ்வொரு சிற்றூரிலும் நின்று பேசும் முறை இன்றும் கையாளப்பெறுகிறது. எனினும், இக்காலத்தில் வேறு புது முறைகளையும் கையாண்டு பிரசாரம் செய்கிறார்கள். புது முறைகளே இப்பொழுது முக்கியமானவை. வானொலி, டெலிவிஷன், மூலம் இப்பொழுது பிரசாரம் நடைபெறுகிறது. வாக்காளர் தம் வீடுகளில் இருந்துகொண்டே அபேட்சகர்களைப் பாக்கின்றனர்; அவர்களது பேச்சைக் கேட்கின்றனர்.

பத்திரிகை மற்றொரு முக்கியமான பிரசார சாதனம். தேர்தலுக்கு முந்திய சில மாதங்களில் பத்திரிகைகள் அபேட்சகர்களது அறிக்கைகளையும் பேச்சுகளையும் பேட்டிகளையும் மிகவும் விரிவாக வெளியிடுகின்றன. தேர்தலுக்கு நிற்பவர்களைப் பற்றிய விவரங்களைப் பத்திரிகைகள் பதிப்பிக்கின்றன. அவர்களது நிகழ்ச்சி நிரல்களும் வெளியாகின்றன.

பிரசாரக் காலத்தில் ஒவ்வோர் அபேட்சகரைப் பற்றியும் வாக்காளருக்கு நன்றாய்த் தெரிந்துவிடும். அபேட்சகர் சொல்லுவனவும், செய்வனவும் வெளிப்படையாகத் தெரிந்துவிடுகின்றன. உள்நாட்டு விவகாரம் பற்றி அபேட்சகர் கூறும் கருத்துக்கள் பத்திரிகைகளில் வெளியாகின்றன. ஜனாதிபதிப் பதவிக்கு நிற்பவரிடம் அவை பற்றிக் கருத்துக் கேட்டு, அவர் கூறுவனவற்றைப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன.

கட்சித் தலைவர்களை அவர் கலந்து பேசுகிறார். மக்களது கருத்தை அவர் அறிய முயல்கிறார். அவற்றோடு தமது கருத்துக்களையும் சேர்த்து, திட்டமான கொள்கையை அவர் வெளியிடுகிறார்.

கடுமையான தேர்தல் பிரசாரம் நடைபெறும் காலத்தில் அபேட்சகரின் மன உறுதி, தைரியம், திறமை முதலியவற்றை வாக்காளர் அறிந்து கொள்கின்றனர். அபேட்சகர் அதற்கு முன் செய்தவற்றையும், முக்கியமான பொருள்கள் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களையும் வாக்காளர் அராய்ந்து பார்க்கின்றனர்.

பெண் வாக்காளர் சங்கம், நகரங்களிலுள்ள சங்கங்கள் முதலிய கட்சிச் சார்பாக ஸ்தாபனங்கள் மக்களின் உரிமையையும், வாக்களிக்கவேண்டிய அவர்களது கடைமையையும் அவர்களுக்கு நினைப்பூட்டுகின்றன.

நேரே வாக்காளரைக் கண்டு பேசுவதால் பெரும் பயன் விளைகிறது. ஆதலால், கட்சி ஊழியரும் அபேட்சகரும் எத்தனை பேரைக் கண்டு பேச முடியுமோ அத்தனை பேரைக் கண்டு பேசுகின்றனர். வாக்காளர் தம் பெயர்களைச் சரியானபடி பதிவு செய்துவைக்கவும் கட்சி ஊழியர் தூண்டுகின்றனர். தேர்தல் நாளில் வாக்களிக்கப் போகுமாறு அவர்கள் செய்கிறார்கள்.

ஜனாதிபதிப் பதவி அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆரம்ப மகாநாடுகள் தோன்றுவதற்குமுன், ஆளைப் பதவி தேடிவர வேண்டுமேயன்றி, ஆள் பதவியைத் தேடலாகாது என்று கருதப்பெற்றது. மகாநாடு நடைபெறுமுன் அபேட்சகர் தம் பெயரைத் தெரிவிக்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை.

இப்பொழுது ஆரம்ப மகாநாடுகள் நடைபெறும் மாநிலங்களில் அபேட்சகர்கள் வெளிப்படையாக வாக்காளரை நேரே கேட்டுகொள்கிறார்கள். ஒப்புக்கொள்ளப்பெற்ற அபேட்சகர் மிகவும் மும்முரமாகப் பிரசாரம் செய்து தீரவேண்டும்.

## அரசியல் கட்சிகள்

அமெரிக்காவின் அரசியல் வரலாற்றில் எத்தனையோ கட்சிகள் தோன்றியுள்ளன. அவற்றில் பல மாய்ந்து விட்டன. இரண்டு பெரிய கட்சிகள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நின்று நிலவி வருகின்றன. வாக்காளரின் கருத்தை ஒருங்கு திரட்டி, அரசாங்கத்துக்கு அறிவிக்கும் சிறந்த சாதனங்களாக விளங்குபவை அவையே.

அமெரிக்கர் பலர் சிறிய கட்சிகளைவிடப் பெரிய கட்சிகளையே விரும்புகின்றனர். சிறிய கட்சிகள் தேர்தலில் வென்று பொறுப்புமிக்க பதவிகள் வகிக்க முடியாது. எனவே தான் ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி என்னும் இரு பெருங் கட்சிகளே இன்றுவரை பெரும்பாலான அமெரிக்கரின் ஆதரவு பெற்று வந்துள்ளன.

அமெரிக்காவின் அரசியல் உறுதியான நிலையில் இருப்பதற்கு இந்த இரு கட்சிகளும் அனுகூலமாக விளங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு கட்சி பதவி வகிக்கிறது. மற்றக் கட்சி அடுத்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பெற்றால் பதவி ஏற்கிறது. அமெரிக்க அரசியல் முறை அடிப்படை நெறிகள் பற்றி இரு கட்சிகளும் பொதுவாக ஒரே கொள்கை உள்ளவை.

தேர்தல் காலத்தை யொட்டி, ஒரு கட்சி மற்றக் கட்சியைக் கடுமையாய்த் தாக்கினாலும், அடிப்படைக் குறிக்கோள்களில் இரண்டு கட்சிகளுக்கும் வேறுபாடு இல்லை. அமெரிக்காவின் அரசியல் ஜனநாயகத்தையும், தனியார் முயற்சியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையையும் இரண்டும் ஒப்புக் கொள்கின்றன.

இரண்டுகட்சிகள் அமெரிக்காவில்பொதுவுடைமையை எதிர்க்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையையும் "நாட்டோ" ஸ்தாபனத்தையும், சுதந்திர நாடுகளோடு நெருங்கிய உறவை வளர்க்கும் மற்ற ஸ்தாபனங்களையும் இரண்டும் ஆதரிக்கின்றன.

அண்மையில் சுதந்திர உலக நாடுகளுக்கு உதவி அளிக்கும் கொள்கைகளையும் திட்டங்களையும் இரண்டு கட்சிகளும் ஆதரிக்கின்றன. புதிதாக வளர்ச்சி அடையும் நாடுகளுக்குக் கடன்களும் நன்கொடைகளும் வழங்கி, அவற்றின் உற்பத்தியைப் பெருக்கி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இரு கட்சிகளும் ஆதரவாக உள்ளன. வெளிநாட்டுக் கொள்கையில் காங்கிரஸிலுள்ள இரு கட்சிகளின் நிலையும் ஒன்றே.

அரசியல் விவகாரங்களில் வேறுபாடுகள் தோன்றும் போது, மக்களின் விருப்பத்தை அறிவிக்கும் கருவியாக இருப்பவை இக் கட்சிகளே.

மற்றக் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு இந்த அரசியல் முறை தடை விதிக்கவில்லை. எல்லாக் கட்சிகளும் தேர்தலில் நிற்கின்றன. பெரும்பான்மையான வாக்குகள் பெற்ற கட்சி பதவி வகிக்கிறது. 1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி அபேட்சகர் ஜனாதிபதி டுவைட் ஐசன்ஹாவர் பெற்ற வாக்குகள் மூன்றரைக் கோடி. ஜனநாயகக் கட்சி அபேட்சகர் அட்லாய் ஸ்டீவன்சன் பெற்ற வாக்குகள் இரண்டு கோடியே அறுபது லட்சம். மற்ற அபேட்சகர்கள் பெற்ற மொத்த வாக்குகள் நான்கு லட்சம்.

ஒவ்வொரு கட்சியும் தன் கொள்கைகளை எடுத்துரைக்கும் அறிக்கைகள் வெளியிடுகின்றன. அக்கொள்கைகளை நிறைவேற்றச் சென்ற காலத்தில் செய்தவற்றையும், இனிச் செய்யக் கருதுபவற்றையும் அவை விரித்துரைக்கின்றன. இரண்டு கட்சிகளின் அறிக்கைகளுக்கும் அடிப்படைக் கொள்கையில் வேறுபாடு இல்லை. ஒரு கட்சி ஒன்றை அதிகமாக வற்புறுத்துகின்றது; மற்றது வேறொன்றை வலியுறுத்துகின்றது. அவ்வளவுதான் முக்கிய வேற்றுமை.

அரசியல் தேர்தலில் தலைவர்களின் செல்வாக்கு மிக முக்கியமானது. உதாரணமாக, ஜனாதிபதி ஐசன்ஹோவரின் மதிப்பு குடியரசுக் கட்சிக்கு அனுகூலமாக விளங்கியுள்ளது. அவ்வாறே காலஞ்சென்ற ஜனாதிபதி பிராங்க்லின் ரூஸ்வெல்டின் செல்வாக்கு ஜனநாயகக் கட்சிக்குத் துணையாக இருந்திருக்கிறது.

கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கட்சியின் மத்திய தலைமையகத்தையும் மாநிலத் தலைமையத்தையும் ஊர்களின் தலைமையகங்களையும் செம்மையாக அமைத்து நிர்வகித்து வருகிறார்கள். அவற்றின் துணையால் கட்சி உறுப்பினர்களை ஒன்றுபடுத்தி, பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துக் கட்சி நலன்களை வளர்க்கிறார்கள். கட்சி வேலைகளுக்காக அவர்கள் தனியார்களிடம் நிதி திரட்டுகிறார்கள்.

தேர்தலில் அபேட்சகர்களின் சொந்தச் செல்வாக்கே மிகவும் மிக்கியமானது. கட்சி ஸ்தாபனங்களின் வலிமையும் வெற்றிக்குத் துணை செய்யும்.

அமெரிக்க அரசியல் சட்டத்தில் கட்சிகள் பற்றிச் சொல்லப் பெறவில்லையாதலால், அரசியல் கட்சி பற்றிய சட்டங்கள் மாநில ஆட்சிகளால் இயற்றப்பெறுகின்றன. மாநிலத் தேர்தல் சட்டங்களே அரசியல் கட்சிகளின் அமைப்பையும் தன்மையும் ஒழுங்குபடுத்துகின்றன.

கட்சி அதிகாரிகளும், அமைப்பாளரும், தொண்டர்களும், ஊதியம் பெற்று உழைப்போரும், பொதுப் பதவிகள் வகிப்போரும், பதவி நாடுவோரும் கட்சிக்காக அதிகமாகப் பணியாற்றுகிறார்கள்.

இவ்வாறு பணியாற்றுவிட்டாலும், கட்சிக்கொள்கைகளை எப்பொழுதும் பின்பற்றி, தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, கட்சிக்கு ஆதரவு தேடும் கட்சி உறுப்பினர்களும் உண்டு.

பெரும்பாலும் கட்சிக் கொள்கையை ஒப்புக்கொண்டாலும், இடைக்கிடையே சில கொள்கைகளைக் குறை கூறுவோரும் உளர். சில சமயங்களில் ஒரு கட்சிக்கு ஆதரவளித்து, மற்றச் சமயங்களில் சுயேட்சையாளராக நடந்து கொள்வோரும் உண்டு.

வாக்காளர் கட்டாயமாக எந்தக் கட்சியிலும் சேர வேண்டும் என்பதில்லை. அரசியல் கட்டணங்கள் வாங்குவதில்லை. கட்சிகள் தம் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஒருவரையும் கட்டாயப்படுத்துவதில்லை.

கொள்கைகளையொட்டி மக்கள் ஒரு கட்சியைச் சேர்வது வழக்கம். எனினும், பலர் தமது குடும்பத்தினர் ஆதரித்த கட்சியையே ஆதரிக்கும் வழக்கமும் நிலவுகிறது. சில இனத்தவர் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்

வதும் சில பொருளாதார வகுப்பினர் ஒரு கட்சியைச் சேர்வதும், சிற்சில இடங்களில் உள்ளவர்கள் குறிப்பிட்ட ஒரு கட்சியில் உறுப்பினராக இருப்பது வழக்கம்.

அரசியல் விவகாரங்களை மக்களுக்கு எடுத்துரைத்து தேர்தல் நாளில் வாக்களிக்குமாறு மக்களுக்கு ஊக்க மூட்டும் பணியை அரசியல் கட்சிகள் செய்கின்றன. வேறுபட்ட கருத்துக்களைக் கேட்கும் வாய்ப்பு வாக்காளருக்கு இருப்பதால், அவர்கள் அவற்றை ஆராய்ந்து பார்த்து முடிவு செய்யலாம். தாங்கள் விரும்பும் அபேட்சகருக்குத் தேர்தல் சாவடியில் ரகசிய முறைப்படி இவர்கள் வாக்களிக்கலாம்.

## நிதி திரட்டுதல்.

அமெரிக்காவில் தேர்தல்களுக்கு ஏராளமாகப் பொருள் செலவாகிறது, செலவுக்கு வேண்டிய தொகை அரசியல் கட்சிகளுக்கு எவ்வாறு கிடைக்கிறது? கட்சி உறுப்பினர் கட்டாயமாக ஒன்றும் கட்சிக்குக் கொடுக்க வேண்டியதில்லை. தேர்தல் நிதி, கட்சி உறுப்பினரிடமிருந்தும் திரட்டப்பெறுகிறது. கட்சி ஆதரவாளர் பிரசாரச் செலவுக்கு மக்களிடம் பணம் கேட்கின்றனர். பொது மக்கள் விரும்பிக்கொடுக்கும் நிதியைக் கொண்டு பிரசாரம் நடைபெறுகிறது.

அச்சு, தபால், விளம்பரம், கட்சித் தலைமையகம், டெலிபோன், தந்தி, பிரயாணம், கூட்டம், கட்சி அணி வகுப்பு முதலியவற்றிற்கெல்லாம் பெருஞ்செலவு ஏற்படுகிறது. கிடைக்கும் நன்கொடைகளில் பெரும் பகுதி டெலிவிஷன், வானொலிக்கும், பத்திரிகை விளம்பரங்களுக்கும், பிரசார அட்டை முதலியவற்றிற்கும் செலவாகிறது.

மாநிலச் சட்ட மன்றத் தேர்தல், நகர மன்றத் தேர்தல் முதலிய வற்றிற்கு ஏற்படும் செலவே இப்பொழுது மிகவும் அதிகமாகிவிட்டது. இப் பதவிகளுக்கு நிற்போர் பிரசாரத்துக்கு உருப்படியான நிதி வழங்கு வேண்டுமென்று கட்சி பொதுவாக எதிர்பார்க்கிறது. ஜனாதிபதிப் பதவித் தேர்தலுக்கு லட்சக்கணக்கான ரூபாய் செலவாகுமாதலால், அபேட்சகர், செலவில் பெரும் பகுதியைக் கொடுக்க முடியாது. அமெரிக்க செனட் தேர்தலுக்கும் அதிகமான செலவு ஏற்படும்.

நிதி திரட்டுவோர் மக்களை நேரே அணுகி பணம் கேட்கின்றனர். வீடு வீடாய்ச் செல்லும் முறையால் நல்ல பயன் விளைகிறது. அந்தந்த இடத்துப் பத்திரிகை மூலமாகவும் நிதி கேட்பது வழக்கம். கடிதம் எழுதி, நிதி திரட்டும் வழக்கமும் உண்டு.

நிதி திரட்ட விருந்துகள் நடத்துவது ஒரு சிறந்த முறை. ஒருநேர விருந்துக்கு 120ரூபாய் முதல் 480 ரூபாய் வரை கேட்பார்கள். அதில் செலவு போக மிச்சம் அதிகமாக இருக்கும். பெரிய நகரங்களில் விருந்து முறை வெற்றி விளைத்துள்ளது.

வேறு பல முறைகளைக் கையாண்டும் கட்சிக்கு நிதி திரட்டுகிறார்கள். நடனங்கள், இரவு விருந்துகள் முதலிய முறைகளையும் தழுவி, கட்சிக்குப் பொருள் சேர்க்கிறார்கள். இவற்றிற்குக் கட்டணம் அதிகமாக இருக்கும்.

ஒவ்வோர் அமெரிக்கரும் தமது கட்சிக்கும் தமது அபேட்சருக்கும் நிதி வழங்க நினைவூட்ட 1958 ஆம் ஆண்டில் கட்சிச் சார்பற்ற ஒரு தேசியத்திட்டத்தைத் தொடங்கினர். அமெரிக்க மரபு நிலையமும், விளம்பரக் குழுவும் சேர்ந்து அதை நடத்தின.

. நிலையம் லாப நோக்கமற்ற ஒரு கல்வி நிலையம். அமெரிக்க வாழ்க்கையின் பல துறைகளையும் சேர்ந்த 153 ஸ்தபானங்கள் சேர்ந்தது அந்நிலையம், விளம்பரக் குழு என்பதும் கட்சிச் சார்பற்ற ஒரு ஸ்தாபனம். பொது நலத் திட்டங்களுக்காக அமெரிக்கத் தொழில் நிலையங்கள் வழங்கும் நன்கொடைகளை அது நிர்வகிக்கிறது.

குடியுரிமையில் பங்கு கொள்ளும் திட்டம் என்றும் ஒன்று நடைபெறுகிறது. அதற்கு இரு கட்சிகளும் ஆதரவளிக்கின்றன. அமெரிக்காவின் தலைசிறந்த பத்திரிகைகளும் அத் திட்டத்தைப் போற்றுகின்றன. வாணிப நிலையங்களும் தொழில் நிலையங்களும் அவற்றில் பணி செய்வோர் தம்மால் இயன்றதைத் தாம்விரும்பும் கட்சிக்கு அளிக்க ஊக்க மூட்டுகின்றனர்.

அமெரிக்க வர்த்தகச் சங்கம் இத்திட்டத்தில் ஒத்துழைக்கிறது. அது தன்னோடு இணைக்கப்பெற்றுள்ள 23 ஆயிரம் வியாபார ஸ்தாபனங்கள் இத்திட்டத்தில் பங்குகொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியது. ஏரோஜெட் ஜெனரல் கார்ப்பரேஷன் என்னும் பாதுகாப்புக் கருவிகள் உற்பத்தி செய்யும் கலிபோர்னியா ஸ்தாபனத்தில் பணிசெய்யும் 15,000பேர்களில் 11,000பேர் கட்சிகளுக்குக் கொடுத்த தொகை ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய். அத்தொகையை இருபெரும் கட்சிகளுக்கும் அவற்றின் அபேட்சகர்களுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுத்தனர்.

கட்சிகளும் அபேட்சகர்களும் திரட்டிய தொகை ஆறு கோடி ரூபாய்.

நாடு முழுவதும் அரசியல் கட்சிகள் எவ்வளவு தொகை திரட்டுகின்றன என்றும், எவ்வளவு தொகை

செலவு செய்கின்றன என்றும் திட்டமாகச் சொல்ல முடியாது. ஒவ்வொரு மாநிலத்திலும் நன்கொடைகள் வசூலிக்கப் பெற்று செலவு செய்யப்பெறுகின்றன. மொத்தக் கணக்கைத் தெரிந்து கொள்ள முடியாது. கட்சிகள் இவ்வளவுதான் செலவு செய்யலாம் என்று நிர்ணயிக்கும் உச்ச வரம்பும் இல்லை.

இருபெரும் கட்சிகள் தேசீயக் குழுக்களே மிகப் பெருந்தொகை திரட்டுகின்றன. 25 ஆயிரம் ரூபாய் வரை மக்கள் தனித் தனியே நன்கொடை வழங்கலாம் என்பது மத்திய அரசாங்கச் சட்டம், எனினும், பெரும்பாலான நன்கொடைகள் 2,500 ரூபாய்க்கும் குறைந்தவையே. பல்லாயிரம் நன்கொடைகள் ஐந்நூறு ரூபாய்க்கும் குறைவானவையே. ஐந்து ரூபாய் முதல் நன்கொடைகள் வழங்கப்பெறுகின்றன.

ஓர் ஆண்டில் எந்த அரசியல் கட்சியின் தேசியக் குழுவும் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு அதிகமாக நன்கொடை திரட்டலாகதென்றும், செலவு செய்யலாகாதென்றும் மத்திய அரசாங்கம் சட்டம் செய்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் நடக்கும் ஆண்டில்தான் இவ்வளவு தொகை திரட்டப்படும். மற்ற ஆண்டுகளில் கட்சிகள் இத்தொகையை நெருங்க முடியாது.

மத்திய அரசாங்க ஊழியருக்கான சட்டத்தின்படி மத்திய அரசாங்க ஊழியர் எந்த அரசியல் கட்சிக்கும் நிதி கேட்க முடியாது. எனினும், அவர்கள் தாமாக அரசியல் கட்சிகளுக்குப் பணம் கொடுக்கலாம்.

பாங்குகளும், வியாபார நிலையங்களும், தொழிலாளர் சங்கங்களும் ஸ்தாபனங்கள் என்னும் முறையில் அரசியல் கட்சிகளுக்குப் பொருள் வழங்க முடியாது. ஆனால்,

பாங்குகள், வியாபார நிலையங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளும், டைரக்டர்களும், உறுப்பினர்களும், தொழிலாளர் சங்க அதிகாரிகளும் தனியாட்களாக அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கலாம்.

தொழிலாளர் சங்கத்தின் அரசியல் பணிக் குழு போன்ற துணைச் சங்கங்கள் நிதிகள் கேட்கலாம்; அவற்றைப் பெறலாம். நன்கொடை வழங்குவோருக்கு என்ன அரசியல் நோக்கத்துக்காக நிதி திரட்டப்பெறுகிறது என்பது தெரியும். அதனை ஒப்புக்கொண்டே நன்கொடை வழங்கப்பெறுவதால், இந்தத் துணைச் சங்கங்கள் நன்கொடைகள் பெறுவது சட்ட விரோதமானது அல்ல.

நன்கொடை விவரங்களையும், செலவுக் குறிப்புக்களையும் பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று சட்டம் விதித்துள்ளது. அது தவறு நேராதவாறு எல்லாம் ஒழுங்காக நடைபெறத் துணை செய்கிறது. ஒரு தனியாள் 15 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக ஏதேனும் பிரசாரக் குழுவுக்கு வழங்கினால், நன்கொடை வரி விதிக்கப்பெறும். வருமானவரி விதிக்கும்போது நன்கொடைத் தொகைகளைக் கழித்துக் கணக்குப் பார்ப்பதில்லை.

### மக்கள் கருத்து என்ன?

தேர்தல் நாளில் வாக்காளர் தம் வாக்குகள் மூலம் தெரிவிக்கும் கருத்தே மககள் ஆட்சியில் பொதுமக்களின் கருத்தாகும். மக்களது கருத்தை இறுதியாக அறியும் வழி அதுவே. தேர்தல் நடப்பதற்கு முன் பொது மக்கள் கருத்தை அறியப் பலவித முயற்சிகள் செய்யப்பெறுகின்றன.

புள்ளிவிவர மாதிரிகளைக் கொண்டு பொதுமக்கள் கருத்தை அறிவதே 1936 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும்

முறை. அதற்கு முன் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஒரு வகை வாக்கெடுப்பு நடத்தி, பொதுத் தேர்தல் முடிவு எவ்வாறு இருக்கக் கூடும் என்று தெரிவிக்கலாயின. மக்கள் பலரைக் கேட்டு, அவை மக்களது கருத்தை அறிய முயன்றன. சில பத்திரிகைகள் அம்முயற்சிகளில் வெற்றி கண்டதும் உண்டு. எனினும், இம்முறை சரியான கணக்கு முறை அன்று.

1916 ஆம் ஆண்டுக்குப்பின் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைக் கிட்டத் தட்டச் சரியாக ஊகித்து எழுதிப் புகழ்பெற்ற சஞ்சிகை "லிட்டரரி டைஜஸ்ட்" என்பது. எனினும் 1936 ஆம் ஆண்டில் இலட்சக்கணக்கான வாக்குகளைக் கொண்டு அது ஆல்பிரட் எம். லாண்டன் தேர்ந்தெடுக்கப்பெறுவார் என்று தெரிவித்தது. ஆனால் அவர் தோல்வியுற்றார்; பிராங்க்லின் டி. ரூஸ்வெல்ட் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பெற்றார். "டைஜஸ்ட்" சஞ்சிகை தவறாக முடிவு செய்ததற்குக் காரணம் என்ன? அது தன் சந்தாதாரர்களையும், மோட்டார் கார் வைத்திருப்பவர்களையும், டெலிபோன் உள்ளவர்களையும் மட்டும் கேட்டு முடிவுசெய்தது. அதுகேட்ட மக்கள் அனைவரும் நல்ல பொருளாதார நிலைமையில் உள்ளவர்கள். சஞ்சிகை குறைந்த வருவாய் உள்ள மக்களின் கருத்தைத் திரட்டவில்லை. அவர்களை அது மறந்துவிட்டது. எனவே, அது தவறாக முடிவு செய்ய நேர்ந்தது.

இந்த வாக்கெடுப்பு முறை அதே ஆண்டில் கைவிடப்பெற்றது. அதன்பின் விஞ்ஞான முறையில் மாதிரி வாக்கெடுப்புகள் பல நடத்தி, இயன்ற வரைத் திட்டமாகச் சொல்லத் தொடங்கினார்கள். இம்முறை பற்றிப் பொது மக்கள் கருத்தை அறிவதில் டாக்டர் ஜார்ஜ் காலப் என்பவர் திறமை மிக்கவர். அக்காலத்தில் அவர் இளம்

விளம்பர நிர்வாகியாக இருந்தார். அதன்பின் அவர் பொதுமக்கள் கருத்தைத் திரட்டும் அமெரிக்க நிலையம் ஒன்றை நிறுவி அதன் நெறியாளரானார்.

1936 ஆம் ஆண்டுக்குப்பின் காலப், எல்மோ ரோப்பர் ஆர்ச்பால்ட் கிராஸ்லீ ஆகியோரும், பல்கலைக் கழகங் களும் பொதுமக்கள் கருத்தை அறியக் கையாண்ட முறை செல்வாக்குப் பெற்றது. மிகச் சிலரது கருத்தை-ஆயிரம் முதல் இரண்டாயிரம் வாக்காளரின் அபிப்பிராயத்தை- அறிந்து முடிவு காண்பதே அம்முறை. அந்த ஆயிரம் இரண்டாயிரம் வாக்காளர் நாட்டில் வயது, வருவாய், மதம், கல்வி, தொழில், இனம் முதலியவற்றில் பல்வகைப் பட்டவராக இருப்பர்.

1948 ஆம் ஆண்டு வரை இம்முறை சிறந்த முறையாக விளங்கியது. 1948 ஆம் ஆண்டில் இம்முறைப்படி ஆராய்ச்சி நடத்தி தாமஸ் ஈ. டுவி என்பவர் ஜனாதிபதித் தேர்தலில் ஹாரி எஸ். ட்ருமனைத் தோற்கடிப்பார் என்று சொன்னார்கள். ஆனால் ட்ருமன் வெற்றி பெற்றார். எனவே புதுமுறை பழைய முறையைவிடச் சிறந்தது அல்ல என்று கருதினார்கள்.

அதன்பின் வேறு ஒரு முறையை அவர்கள் கையாள லானார்கள். அதன் பொருட்டு நகரங்கள், ஊர்கள், நாட்டுப் புறங்கள் ஆகியவற்றின் பட்டியல்களைத் தயாரித்தார்கள். நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவி லுள்ள பெயர்களைச் சேர்ந்தவை, ஊர்களைச் சேர்ந்தவை, நாட்டுப் புறங்களைச் சேர்ந்தவை என்று பிரித்தார்கள். ஓர் எண்ணைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு பிரிவிலும் அந்த எண்ணுக்குரியவர்களின் கருத்தைத் தெரிந்து கொண்டார் கள் இம்முறை, பலவகைப்பட்ட மக்களின் கருத்தையும் அறியத் துணை செய்தது.

இவ்வாறு கருத்தை அறிந்து முடிவு இவ்வாறுதான் இருக்கும் என்று கூறுவது எப்போதும் சரியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இன்னாருக்குத்தான் வாக்களிப்பது என்று முடிவு செய்யாமல் இருப்பவர்கள் யாருக்கு வாக்களிக்கக்கூடும் என்று சொல்லுவது எளிதல்ல.

1952ஆம் ஆண்டிலும் 1956ஆம் ஆண்டிலும் தேர்தல் முடிவைத் தெரிவிப்போர் ஜனாதிபதி ஐஸன்ஹாவரே வெற்றி பெறுவார் என்று சொல்லிவிட்டார்கள். எனினும் மிகப் பெரும்பான்மையான மக்கள் வாக்களிப்பார்கள் என்று அவர்கள் கூறவில்லை.

தேர்தல் முடிவை இந்த முறைகளைக் கையாண்டு எப்போதும் சரியாய்ச் சொல்ல முடியவில்லை. எனினும், இந்த முறைகளெல்லாம் பொதுமக்கள் கருத்தை அறியத் துணை செய்கின்றன என்பதற்கு ஐயமில்லை.

அபேட்சகர்கள் பொதுமக்கள் நிலையைத் தெரிந்து கொள்வதற்கு இந்த முறைகள் பயன்படுகின்றன. அரசாங்க அதிகாரிகளும் பொதுமக்கள் கருத்தை இதன் மூலம் அறிந்து கொள்கிறார்கள். இம்முறை ஜனநாயக முறைக்கு ஒரு திட்டமான உதவியாக விளங்குகிறது.

# சுதந்திர நைஜீரியா

பிரிட்டிஷ் காலனிகளில் மிகப்பெரியதும், அவற்றின் மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதி மக்கள் வசிக்கும் நாடாகிய நைஜீரியா அக்டோபர் முதல் தேதி முதல் சுதந்திர நாடாயிற்று. காமன்வெல்த் கூட்டமைப்பிலும் முழு அங்கத்தினராக சேர்ந்தது. கடந்த அரை நூற்றுண்டுக்குள் சிற்றரசர்கள் கதம்பமாகப் பரவி இருந்த ஒரு நிலப்பகுதி இன்று ஒரு நவநாகரிக சுதந்திர சமஷ்டியாக உருவாகி உள்ளது. இரண்டாவது யுத்தத்திற்குப் பிறகு காமன்வெல்த்தில் சுதந்திர நாடாக இடம் பெறும் ஆருவது நாடு, நைஜீரியா.

ஏறக்குறையப் பாகிஸ்தான் அளவு நிலப்பரப்புள்ள நைஜீரியாவை நைஜர் நதியும், பேனு நதியும் நான்கு கூறுகளாகப் பிரிக்கின்றன. இந்நாட்டின் ஜனத்தொகை சுமார் மூன்றரைக் கோடி. நைஜீரியாவின் சில பகுதிகளுடன் பிரிட்டிஷ் தொடர்பு பதினைரும் நூற்றுண்டு முதலே இருந்து வருகிறது என்ருலும், ஒன்றுபட்ட பிரதேசமாக பிரிட்டனின் ஆட்சியின் கீழ் வந்து ஐம்பது வருடங்களுக்கும் குறைவுதான் ஆகிறது. மற்றெல்லாக் காரணங்களை விட முக்கியமாக, அடிமை வியாபாரத்தை ஒழிக்க பிரிட்டன் எடுத்துக்கொண்ட முயற்சிதான், பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பாதியில், பிரிட்டனை - தான் விரும்பாமலே - மேலும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள உந்திற்று அடிமை ஏற்றுமதியைத் தடுக்க, 1861 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட லாகோஸ் என்ற சிறு காலனியும் பிரிட்டிஷ் வியாபாரிகளாலும், சமூகச் சேவகர்களாலும்

கண்டுபிடித்து. ஆராயப்பெற்ற மற்றப் பிரதேசங்களும் 1914 ஆம் ஆண்டில் ஒன்ருக இணைக்கப்பெற்று ஒரே ஆட்சியின் கீழ் வந்தன.

நைஜீரியாவின் அரசியல் முன்னேற்றம் குறிப்பிடத் தக்கது, சிறப்பானது. ஒரு துளி ரத்தம் சிந்தாமலும், ஒரு தோட்டாவைக்கூட விரைக்காமலும் நைஜீரியா சுயாட்சி பெறும் என்று மேற்கு நைஜீரியப் பிரதம மந்திரி அவலோவோ சிற்றரசர் கூறியது மெய்யாகிவிட்டது. நைஜீரியா இரத்தம் சிந்தாமல், வெறுப்புக்கோ வெறிக்கோ இடந்தராமல் சுதந்திரப் பாதையில் முன்னேறிவிட்டது. நாட்டில் அரசியல் பொறுப்பும் நிர்வாகப் பயிற்சியுமுள்ள ஆப்பிரிக்கர்கள் பலர் உண்டு.

நைஜீரியா, பிரிட்டிஷ் காலனி ஆட்சிக்குப் பெருமை தரும் முறையில் சீராக முன்னேறி விடுதலை அடைந்திருக்கிறது. சுதந்திர நைஜீரியா, சிறந்ததோர் சூழ்நிலையில் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு, பிரிட்டிஷ் அரசாங்கம், சிறந்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

கல்வித்துறையில் ஆப்பிரிக்க நாடுகளின் முன்னணியில் நைஜீரியா நிற்கிறது என்று அண்மையில் வெளியான 'உனெஸ்கோ' அறிக்கை கூறுகிறது. மேற்கு நைஜீரியாவோ ஆப்பிரிக்க நாடுகளுக்கு வழிகாட்டும் முறையில் மேலும் ஒரு நிலையில் முன்னேறியிருக்கிறது. அங்கு டெலிவிஷன் நிலையம் நிறுவப்பெற்றுள்ளது. தினசரி ஒரு மணி நேரம் மாணவர்களுக்கான நிகழ்ச்சி நடைபெறுகிறது. இபடான் பல்கலைக் கழகத்தில் ஆயிரம் மாணவர்கள் பயிலுகிருர்கள். ஸாரியாவில் நவீன வசதிகள் நிறைந்த பொறியியற் கல்லூரி ஒன்று உண்டு.

அந்த நாட்டில் கல்வி முன்னேற்றங்காண கடினமாக உழைப்பது அவசியம். நாட்டில் 1958ஆம் ஆண்டு பள்ளித்

தகவல்படி நபர் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 330 ரூபாய். அருகிலுள்ள கனு நாட்டில் நபர் வருமானம் இதைப்போல இரு மடங்கு என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். ஆயினும் நைஜீரியா மக்கள் மனம் சோர வேண்டியதில்லை. நைஜீரியாவில் இயற்கை வளமுண்டு. அதைச் சிறப்பாகப்பயன்படுத்தி ஏற்றுமதிவாணிபத்தைப் பெருக்கினல் சுபிட்சம் காணமுடியும். புதிய தொழில் களைத் தொடங்க வெளிநாட்டு உதவி தேவை. உதவி கணிசமாகக் கிடைத்தால், சுபிட்சமும் விரைவிலேற்படும். நைஜீரியாவுக்கு வெளிநாட்டு உதவி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மாகாண முதல் மந்திரிகளும் சமஷ்டிப் பிரதம மந்திரியும் வெளிநாட்டு முதலீட்டுக்கு தகுந்த பாது காப்பு அளிபபதாக உறுதியளிக்கிருர்கள். நிலையான அரசு நீடித்தால்தான் வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியும். நைஜீரியாவிலுள்ள முக்கியமான மூன்று அரசி யல் கட்சிகளும் திறம்படச் செயலாற்றுவதால், நாட்டில் சிறந்ததோர் அரசியல் மரபும் வாழ்க்கையும் உருவாகி வருகிறது. ஆகவே நிலையான அரசாட்சி நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

மாகாண அரசுகள் தன்னிச்சையாக இயங்காமல் சமஷ்டி அரசாங்கத்துக்கு துணையாகவும் கூட்டுறவுடனும் செயலாற்றினல்தான் முன்னேற்றங்காண முடியும். ஆப் பிரிக்காவில் வீசும் அரசியல் புயலில் சிக்கிக்கொள்ளாமல் ஆற்றலை ஒருங்கு திரட்டி, நாட்டின் முன்னேற்றத்தில் கருத்துடன் உழைத்தல் அவசியம். ஷெல் ஆயில் கம்பெனி, பிரிட்டிஷ் பெட்ரோலியம் கம்பெனி முதலிய வெளிநாட்டு நிறுவனங்கள் நைஜீரியாவின் எதிர்காலத்தில் நன்னம்பிக்கை கொண்டு செயலாற்றுவது ஆறுதலான செய்தியாகும். நைஜீரியத் தலைவர்களும், நாட்டின் முன் னேற்றத்திற்கு பிறர் உதவியும் கூட்டுறவும் அவசியம் என்பதை உணர்ந்து செயலாற்றுவதும் குறிப்பிடத் தக்கது.

ஈக்கள். சிலர் நினைப்பதுபோல, சாதுவான பூச்சிகளல்ல; இவற்றின் மூலம் சீதபேதி, பேதி, டைபாய்ட், காலரா போன்ற கொடிய வியாதிகள் பரவுகின்றன.

இவை தின்னாத பொருளில்லை; மலம்,சாணம், எச்சில், அழுகிய பொருள்கள், குப்பை, கூளம், எல்லாவற்றையும் தின்னும். ஈக்களின் மயிர் நிறைந்த உடலிலும், ஈரப் பசையுள்ள கால்களிலும் இவை எளிதாக ஒட்டிக்கொள்கின்றன. நமது உணவில் உட்காரும்போது கிருமிகளும் உணவில் கலந்து விடுகின்றன. ஈக்களுக்கு கெட்டியான உணவைத் தின்ன முடியாது, ஆகவே அது, தான் உட்கொண்ட பொருளை வெளியே உமிழ்ந்து அது தண்ணீராக கரைவது வரையில் மிதித்துப் பிறகு மீண்டும் உறிஞ்சுகின்றன. ஈக்கள் தின்னும்போது அதன் தீனிகளைக்கூடச் அசுத்தமாக்குகின்றன; அடிக்கடி உடல் முழுவதையும் கால்களால் துடைத்துக்கொள்ளுகின்றன; இதனால் உதறுகிற கிருமிகள், திறந்துவைக்கப்பெற்றுள்ள உணவிலும் கலந்துவிடுகின்றன.

ஈக்களால் பரவும் அபாயத்தைத் தடுக்கவேண்டுமானால் இதன் இனவிருத்தியை முதலில்நிறுத்தவேண்டும். கதகதப்பான ஈரச் சாணத்திலும் மலத்திலும் இனவிருத்தியாகிறது. அதிக உஷ்ணமும் அதிகக்குளிரும் இல்லாத இடத்திலும் ஈக்களை எப்போதும் காணலாம். உஷ்ணமும், குளிரும் அதிகமாக இருக்கும் இடங்களில் இவை பிப்ரவரி முதல் மே மாதம் வரையிலும், ஆகஸ்டு, செப்டம்பரிலும் அதிகமாகக் காணப்படும். ஈக்களுக்கு உணவு எங்கெல்

லாம் கிடைக்கிறதோ, இனவிருத்திக்கேற்ற குப்பை கூளங்கள் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் ஈக்களும் மொய்க்கும், இவை உணவைத் தேடி எல்லா இடங்களுக்கும் கூட்டம் கூட்டமாகப் பறந்து சென்று மலப் பொருள்களைப் பரப்புவதோடு செல்லுமிடங்களிலெல்லாம் எச்சமிடுகின்றன.

பெண் ஈக்கள், ஒவ்வொரு தடவையும் 100 அல்லது 150 முட்டைகள் வீதம் ஐந்து அல்லது ஆறு தடவைகளில் 600 முதல் 900 முட்டைகள் இடுகின்றன; சுமார் 1/20 அங்குலம் நீளமுள்ள இம்முட்டைகள் வெள்ளை நிறத்தில் நீண்ட உருண்டை வடிவத்திலிருக்கும். ஈரம் நிறைந்த வெடிப்புகளிலும், உரக்குவியல்களிலும், அழுகிய பொருள்கள்மீதும் சாதாரணமாக அங்கங்கே சிதறிக்கிடக்கும் குப்பை கூளங்களிலும் இவை முட்டையிடும். மலம் முட்டையிடுவதற்கேற்ற பொருளாகும்.

சில மணி நேரத்துக்குப்பிறகு இம்முட்டைகளிலிருந்து வெண்மை நிறத்தில் கால் இல்லாத புழுக்கள் (லார்வா) வெளிப்படுகின்றன. தலைப்புறம் கூர்மையாக இவை சுமார் அரை அங்குலம் நீளமிருக்கும்; அழுகிய பொருள்களை ஐந்து நாட்கள் தின்று, வளர்ந்து கரும் பழுப்பு நிறக் கூட்டுப் புழு (பியூப்பா) நிலையை அடையும்; மண்ணில் 4, 5 அடி ஆழத்தில் இருக்கும் இப்புழுக்கள் கூட்டுப் புழுவாக மாறுகையில் மண்ணின் மேல்பகுதிக்கு வந்துவிடும். இது ஒவ்வொன்றும் கால் அங்குலம் நீளமிருக்கும். மூன்று தினங்களுக்குப் பிறகு இவை முழு உருவம் பெற்ற ஈக்களாக வளர்ந்து வெளியே பறக்கும்.

உஷ்ணம், ஈரப் பதனம், உணவு ஆகியவை எல்லாம் சாதகமாகவிருந்தால் முட்டையிலிருந்து ஈ வெளிவர ஐந்து

நாட்களாகும். ஆனால் சாதாரணமாக எட்டு முதல் இருபது தினங்கள் பிடிக்கும். பெண் ஈ பிறந்த ஆறு தினங்களில் முட்டையிடத் தொடங்கும். ஈக்கள் வேனிற் காலத்தில் ஒரு மாதமும், பனிக் காலத்தில் மேலும் சிறிது நாட்களும் உயிர் வாழும்.

இனவிருத்தியாகும் இடங்களில் ஈக்களை அதிகமாகக் காணலாம் மீதியுள்ளவை வெகு தூரத்துக்குப் பறந்து சென்றுவிடும். வீட்டு ஈக்கள் 20 மைல் பறந்து செல்ல முடியும்; சாதாரணமாக இவை பிறப்பிடத்திலிருந்து நான்கு மைல்களுக்கு அப்பால் வரையில் பறந்து செல்கின்றன.

ஈக்களின் இனவிருத்தியைத் தடுப்பதன் மூலமும், ஈக்கள் வீட்டுக்குள் வராமல் தடுப்பதன் மூலமும் இவற்றை ஒழிக்கலாம்.

மாட்டுத் தொழுக்களில் மூடப்படாமலிருக்கும் உரக் குவியல்களில் ஈ இனவிருத்தியாகி அருகிலுள்ள வீடுகளிலும் உணவு விடுதிகளிலும் பரவுகின்றன. சில லகுவான முறைகளைக் கையாண்டு எந்த இடத்திலும் ஈ பெருகுவதைத் தடுக்கலாம்.

(1) கண்ட கண்ட இடங்களில் மலம் கழிப்பதைத் தடுக்க வேண்டும்; சுகாதார கக்கூசுகளைச் சரியாக உபயோகித்து, சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

(2) வீடுகளுக்கு அருகில் சாணம் முதலியவற்றைச் சேர்த்து வைக்கக்கூடாது, அவ்வப்போது சேருகிற சாணத்தைத் தினந்தோறும் எடுத்துச் சென்று மாற்ற வேண்டும்,

(3) குப்பை கூளங்களையும், சமையல் அறை கழிவுப் பொருள்களையும் தெருவிலும் சுற்றுப்புறங்களிலும் போடக்கூடாது; அவை மூடி வைக்கப்பட்டு தினந்தோறும் உரக் குழிகளில் அல்லது முனிசிபல் தொட்டிகளில் சேர்க்கப் பெற வேண்டும்.

உரக் குவியல்களை நன்முக அடித்து இறுக்க-வேண்டும்; இவற்றில் மண் பூசுவது நல்லது. குப்பை கூளங்களை எரித்துப் பொசுக்குவது இன்னொரு முறை; உணவுப் பொருள்களில் ஈ புகாதவாறு அவை மூடி வைக்கப் பெற வேண்டும். ஈக்களைக் காணும்போதெல்லாம் அவற்றை அடித்துக் கொல்ல வேண்டும். இதன் இனம பெருகி விடக்கூடாது இவற்றைக் கொல்லப் பலபூச்சி நாசினிகள் கண்டு பிடிக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றைப் பயன் படுத்தலாம்.

நமது சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள சில யோசனைகள் வருமாறு:

(1) ஈக்கள் நோய்களைப் பரப்புகின்றன; அவற்றை அழித்துவிட வேண்டும்.

(2) ஈக்கள் இனவிருத்தியாகும் இடங்களைச் சுத்தமாக்கி இனப் பெருக்கத்தைத் தடுக்க வேண்டும்; அழுகிய பொருள்கள் யாவற்றிலும் ஈ பெருகும்.

(3) உணவிலும் பானங்களிலும் ஈக்கள் அணுகாதவாறு மூடி வைக்க வேண்டும்.

(4) கக்கூசுகளில்தான் மலஜலம் கழிக்க வேண்டும்;

(5) சுத்தமான வீடும் சுத்தமான சூழ்நிலையும் ஈக்களுக்கு விரோதிகள்.

# குப்பை மலை

நவீன காலத்துப் பெரிய நகரங்களிலெல்லாம், கழிவுப் பொருள்களை என்ன செய்வதென்பது பெரிய தலைவேதனை தரும் பிரச்னையாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான வீடுகளிலிருந்து குப்பையும் கூளமும் சாம்பலும் சேர்ந்து மலை மலையாகக் குவிந்து விடுகிறது. இதையெல்லாம் எங்கே கொண்டு தள்ளுவது? பெரிய பெரிய பள்ளங்கள் வெட்டி அவற்றில் கொண்டு கொட்டுகிறார்கள். அவையும் அநேகமாக எல்லாம் நிரம்பிவிட்டன. குப்பை மலை வளர்கிறது. நிலத்தில் உள்ள தண்ணீர்கூட இதனால் கெட்டுவிடும் போலிருக்கிறது. இதே சமயம் நகரங்களில் மக்களின் தொகையும், நெருக்கமும் பெருகிக் கொண்டே போகிறது.

உதாரணமாக, தென்மேற்கு ஜெர்மனியின் முக்கிய நகரமாகிய ஆறரை லட்சம் மக்கள் உள்ள பிராங்க்பர்ட்டில் அருகில் உள்ள குன்றுகளை விடப் பெரிதாக, குப்பை மலை வளர்ந்து விட்டது. சுற்றிலும் பல மைல் தூரத்துக்கு காற்று மண்டலமே இதனால் கெட்டுப் போயிற்று. இந்த செயற்கை மலைமீது புல்பற்றைகள் கொண்டுமூடி, அதன் அருகில் உள்ள மலை, காடு முதலிய இயற்கைக் காட்சிகளைப் பார்த்து ரசிக்க வசதியான ஓர் இடத்தில், அருமையான சிற்றுண்டி நிலையம் ஒன்றை அமைக்கலாம் என்று முதலில் யோசனை செய்தார்கள். ஆனால் பிறகு இதை ஒரு யந்திர அடுப்பில் எரித்து, பக்கத்தில் உள்ள ஒரு பட்டணத்துக்கு உஷ்ண சக்தியும் வெந்நீரும் கிடைக்கும்படி செய்யத் திட்டமிட்டனர். ஒரு டன் கழிவுப் பொருளுக்கு சுமார் ஒன்றரை டன் தண்ணீர் ஆவி உற்பத்தி செய்யலாம்

இந்த வேலை அசுத்தத்துக்கு இடமில்லாமல் துப்புரவாக நடைபெறும். புகை, கரி, நாற்றம் ஆகியவை வெளியேறு மல் பிரம்மாண்டமான சல்லடைகள் தடுத்துவிடும். இவ் வாறு எரிப்பதில், மிஞ்சி நிற்கும் சாம்பல் போன்ற கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி, வீடு கட்டுவதற்கான பாளங் கள் தயாரிப்பதற்கு ஒரு ஸ்தாபனம் தயாராயிருக்கிறது.

பெரிய நகரங்களில் ஆண்டுதோறும், ஓர் ஆளுக்கு ஒரு கனமீட்டர் வீதம் கழிவுப் பொருள் சேருகிறது. இந்தக் கணக்குப்படி, ஹாம்பர்க் போன்ற ஒரு நகரத்தில் ஆண் டுக்கு 16 லட்சம் கனமீட்டரும், மூனிக்கில் 9 லட்சம் கன மீட்டரும் குப்பை சேரும். இந்த இடங்களிலெல்லாம் இவற்றை அகற்றி நீக்கும் பிரச்னையை ஜெர்மன் எஞ்சினி யர்கள் தீர்த்து விட்டார்கள். மெல்லிய கழிவுப் பொருள் களைக் கொண்டு நிலத்தை, குறிப்பாக, மணற்பாங்கான நிலத்தைப் பண்படுத்தலாம். கரடும் கட்டியுமாக உள்ள கழிவுகள் சதுப்பு நிலங்களையும், பாழ் நிலங்களையும் பண் படுத்த உதவும். ஆனால் இந்த முறை அவ்வளவு சௌகரிய மானதல்ல. ஏனென்றால், தொழிலாளர்களின் சம்பளங் கள் உயர்த்தப்பட்டிருந்தாலும் கூட, குப்பை கூளம் அகற்றும் வேலைக்கு ஆட்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை. எனவே, தெற்கு ஜெர்மன் தலைநகரான மூனிக், இவற்றை எரிக்கும் யந்திர அடுப்பு ஒன்றை அமைக்க விரும்புகிறது. ஜெர்மனியின் மற்ற பெரிய நகரங்களும் இதே போல பிராங்க்பர்ட்டின் உதாரணத்தை விரைவில் பின்பற்றும்.

கழிவுப் பொருள் பிரச்னை பற்றிப் பேசுகையில், பெர் லினில் உள்ள விசித்திரமான காட்சி நிலையம் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அங்கே, "கழிவுப்பொருள் காட்சி

நிலையம்'' ஒன்று இருக்கிறது. யந்திரங்களின் உதவி யுடன். ஓடும் "பெல்ட்"களில் கழிவுப் பொருள்களை சிறியது, பெரியது என்று இறுதியாகப் பிரித்துப்போடும் போது காணக் கிடைக்கும் பொருள்களைச் சேகரித்து இந்தக் காட்சியில் வைத்திருக்கிறார்கள். குடும்ப நினைவுப் பொருள்கள், வேட்டையில் அடைந்த வெற்றிகளின் சின்னங்கள் பழய கைக்கெடியாரங்கள், வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்கள், வாத்தியங்கள், விளையாட்டுச்சாமான்கள் போன்றவையும், எப்போதோ காணுமல் போய் மறந்து விட்ட முத்துக்கள், மோதிரங்கள் போன்ற விலைஉயர்ந்த பொருள்களும் இவ்வாறு சேகரிக்கப் பெற்று காட்சியில் வைக்கப் பெற்றுள்ளன இந்தப் பொருள்களில் சில மிகப் பழையவை, சில மிக நவீனமானவை. இவற்றில் பெரும்பாலானவை, கழிவுப் பொருள்களை சுகாதாரத்துக்குக் கேடு வராத முறையில் எப்படி அகற்றித் தீர்ப்பது என்பது, மண்டையை உடைக்கும் பெரிய பிரச்னையாக உருவெடுப்பதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்தவை.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

| தலைமை ஆபீஸ்: | கிளை ஆபீஸ் & ஷோரூம் |
| --- | --- |
| கூட்ஸ் ஷெட் ரோடு | 7/69, ஜெயில் ரோடு |
| பொள்ளாச்சி | கோயமுத்தூர் |

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்


விற்பனையாளர்கள்.

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்



தீயை அடக்கியாண்ட அறிவும்
சக்கரத்தைப் பயன்படுத்திய
சாமர்த்தியமுமே நமக்கு
மோட்டார் சாதனத்தை
அளித்தன



இன்று. தென்னிந்தியாவில் மோட்டார் வாகனத் தொழிலில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பலவிதமான தேவைகள் அனைத்தையும் டி.வி.எஸ் ஸ்தாபனம் அதனோடு இணைந்துள்ள பல கிளை ஸ்தாபனங்களின் மூலம் பூர்த்தி செய்து வருகிறது.

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை
கிளைகள் :
திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்